# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

### அருட்சகோதரிகள்

*மேரி செசரியா, ரூபெல்லா மேரி, ஜெரின் மேரி, லில்லி புஷ்பம், புஷ்பம் - சிந்தாமணி, ரூபி - வித்யா மேரி, ஸ்டெல்லா ரோஸ்- திண்டுக்கல், , ரஞ்சிதம், பிரேமா, லில்லி இசபெல்லா மேரி, ஜோஸ்பிட்டா மேரி, சேசு ராஜம், ஜூலி எலிசெபெத், லோரா மேரி, லீமா, சகாயம், லூர்து மேரி, ஜான்சி மேரி, ஏதெல் பெல்சியா, ஹெலென் மேரி, வில்சன் மேரி, அருள் சேவியர், மரிய ரூபி குயின், ஜெய சேகரி, ரூபி மேரி. அசும்தா, ஜான்சி மேரி, லூர்து மேரி, லீனா, சுனிதா*

### பொதுநிலையினர்

*பிரான்சிஸ் பேசில், அனிருத் ஜோஸ்வா, ஜேடன், லீமா தெரஸ், இமாக்குலேட் சோபியா, செலின் மேரி, இருதய விஜில்லா - திண்டுக்கல், ஜோஸ்வா சந்தோஷ், கெர்மன், கரோலின் பிலலேந்திரன், மாசில்லா -தூத்துகுடி, புஷ்பக்கன்னு - கோவை, சிப்ரியான்-தெளி, ஜோசப் சக்கர் ஜானி- திருச்சி, மேரி மார்கிரேட்- திருச்சி, பாத்திமா, , லீலாவதி, ஜெகத்ரெட்சகர், அமலச்செல்வி, ஆன்னி பீட்டர்ராஜ், கனிஷியஸ் விஷால், வியாகுல மேரி, ஜான் ஜோசப், ஜெனிபா,* மேரி- இளையரசனேந்தல், கிளாரா லூர்து மேரி, ஜோசப் சகாய ராணி, மிக்கேல் சாமி, சூரியா அன்பு, அற்புத சீலி ஜோ. ஆண்டனிகா ஷெர்லி, மிக்கேல் சாமி, லோயோலா ஜெகலெட்சகன்

### குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்



அ.சகோ. ஜெனிபா- கன்னியாகுமரி
திருமதி. அனிருத் ஜேடன்- திருச்சி

**Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.
Editor: Fr. M. Antony Shaji OSM.**






# லூர்து அன்னை

## பதிப்பாசிரியர் பக்கம்




அன்னையின் பக்தர்களே! ஆகட்டும் இதழின் வாசகர்களே, உங்கள் அனைவரையும் பிப்ரவரி மாத இதழோடு சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த மாதம் லூர்து அன்னையின் விழாவினைக் கொண்டாடுகிறோம். லூர்து நகரில் வாழ்ந்த பிரான்சுவா சுப்ரியூஸ் மற்றும் லூயிஸ் காஸ்தேரோ தம்பதியினருக்கு ஜனவரி 7, 1844 இல் பிறந்தவர் சுபீரஸ் பெர்னதெத். இவர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தாலும், பக்தியும் நல்லொழுக்கமும் கொண்டிருந்தார். இந்த 14 வயது பெர்னதெத் விறகு பொறுக்க சென்றிருந்தபோது, லூர்து நகருக்கு அருகில் உள்ள "மசபியேல்" என்னும் கெபியில் (குகையில்) 1858, பிப்ரவரி 11 ஆம் நாளிலிருந்து ஜூலை 16 ஆம் நாள் வரை, 18 முறை மரியா காட்சிக் கொடுத்தார். இக்காட்சிகளின் அடிப்படையிலேயே மரியன்னைக்கு **"லூர்து அன்னை"** என்ற பெயர் வழங்கலாயிற்று.

இக்காட்சியைப் பற்றி பெர்னதெத் கூறும்போது, "நான் தலைநிமிர்ந்து கெபியை உற்றுநோக்கினேன். குகையின் உள்ளிருந்து பொன் நிறத்திலான மேகமூட்டம் வெளிவந்தது. பிறகு அழகான இளமையான



## உள்ளே




அன்னை மரியாவின் கற்றலும் ஆன்மீகமும் - 05
அன்னை மரியாவின் திருப்பயணம் - 06
அன்னையின் திருத்தலங்களை நோக்கி - 09
விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி - 14
மீப்புப்பயணம் - 16
ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் - 17
மரியின் ஊழியர்சபையின் புனிதம் - 24
மாதா மன்றாட்டு மாலை - 25
பொதுநிலையினர் பார்வையில் அன்னை மரியாள் - 28
திருஅவை வரலாற்றில் மரியாள் காட்சிகள் - 30
ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி - 32

ஒரு பெண் குகையின் உள்ளிருந்து வெளியேவந்து ரோஜா புதருக்குமேல் நின்றார். அவர் வெண்ணிற ஆடையை அணிந்திருந்தார். அவருடைய இடையில் நீலநிறக் கச்சையை கட்டி இருந்தார். அவருடைய பாதங்கள் ஒவ்வொன்றின் மீதும் மஞ்சள் நிறத்தில் ஒரு ரோஜா மலர் இருந்தது. அவரது கையில் இருந்த ஜெபமாலையும் மஞ்சள் நிறத்தில் இருந்தது" என்கிறார்.

பெர்னதெத் தயக்கத்தோடு இக்காட்சியைப் பற்றி தன் பெற்றோரிடம் கூறினார். அவர்களோ அவரை, மீண்டும் அந்தக் கெபியின் பக்கம் போக வேண்டாம் எனத் தடுத்தனர். ஆனால் பிப்ரவரி 14 அன்று, அவர்கள் அனுமதி அளித்ததன் பேரில் பெர்னதத் கெபிக்குச் சென்று அன்னையை சந்தித்தார். பிப்ரவரி 18 இல் மூன்றாம் முறையாக காட்சியளித்தபோது அன்னை பெர்னதெத்திடம் தொடர்ந்து இரண்டு வாரம் கெபிக்கு வருமாறு பணித்தார்.

அன்னையின் இக்காட்சிகளில், பெர்னதெத் வழியாக பின்வரும் வேண்டுகோள்களை அனைவருக்கும் அன்னை மரியா விடுத்தார்.

1. அந்த இடத்தில் ஒரு ஆலயம் எழுப்பப்பட வேண்டும். மக்கள் பவனியாக அங்கு வர வேண்டுமென்று குருக்களிடம் சென்று அறிவிக்கச் சொன்னார்.
2. பாவிகளின் மனமாற்றத்திற்காக மன்றாடும்படி கேட்டுக்கொண்டார்.
3. கெபியிலிருந்து புதுமையாக தோன்றிய ஊற்றின் தண்ணீரை பருகச் சொன்னார்.
4. செபமாலை செபிப்பதின் அவசியத்தை வலியுறுத்தினார்.

லூர்து அன்னை கூறிய வேண்டுகோள்களில் ஒன்று "பாவிகளின் மனமாற்றம்". பிப்ரவரி 18 ஆம் நாள் முதல், நாம் தவக்காலத்தை துவங்குகின்றோம். அன்னையின் பக்தர்களாக, பிள்ளைகளாக இருக்கும் நாம் லூர்து அன்னையின் வழிகாட்டுதலோடு, தவக்காலத்தை அதன் புனிதம் குறையாமல் கடைப்பிடித்து, செபம் தவம், நோன்பு என்று வாழ முயற்சிப்போம். நம்முடைய பாவ வாழ்வை மாற்றி, புனிதப் பாதையை தேர்ந்தெடுத்து அன்னையின் பிள்ளைகளாக வெற்றி நடை போடுவோம். வன்மத்தாலும், போரினாலும், மனக்கசப்பினாலும் நிறைந்த இந்த உலகமானது கடவுளின் இரக்கத்தால் தொடப்பட்டு, ஒவ்வொருவரும் ஒருவர் மற்றவரை அன்பு செய்து, மன்னித்து, மன்னிப்புக்கோரி, மகிழ்வுடன் வாழ தொடர்ந்து பயணிப்போம். அன்னையின் ஆசிரை வேண்டுவோம்.





கூறினார். எனக்கு 70 வயது ஆகிறது. அதனால் வீட்டில் எல்லோரும் பயந்து கொண்டே இருந்தார்கள். இதைக் குறித்து அன்னை மரியாளிடம் அழுது ஜெபித்தோம். அப்பொழுது பெரிய மருத்துவமனையில் இருந்து அழைத்தார்கள், அறுவை சிகிச்சையில் நல்லபடியாக மூன்று அடைப்புகளும் சரி செய்யப்பட்டன. மருத்துவமனையிலிருந்து வந்த பிறகு நான் மரியாயின் சேனையில் இருந்த சகோதரிகளை ஜெபிக்க அழைத்தேன். இப்பொழுது ஆண்டவர் எனக்கு சுகம் கொடுத்துள்ளார். நான் நல்லபடியாக இருக்கிறேன். *இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!*

5. கடந்த டிசம்பர் மாதம் எனக்கு இரத்த அணுக்கள் கம்மியாக இருந்தது. ஜீவ மாதாவிடம் இங்கு வந்து எனது அக்கா ஜெபித்துக் கொண்டார்கள். நான் இப்போது சுகமாக இருக்கின்றேன். அதற்காக ஜீவ மாதாவிடம் நன்றி சொல்ல வந்தேன். *இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!*

6. நான் சென்னையை சேர்ந்தவன். கடந்த 13 ஆண்டுகளாக குழந்தை இயேசு ஆலயத்திற்கு வருகின்றேன். என் மகளுக்கு திருமணம் ஆகி இரண்டு முறை கருவுற்று கரு கலைந்து விட்டது. அப்பொழுது என் மகள், "கவலைப்படாதீங்க அம்மா, எனக்கு இனி குழந்தை பிறக்காது" என்று. ஆனால் நான் அதை மறுத்து அதெல்லாம் அப்படி சொல்லக்கூடாது, நான் ஜீவ மாதாவிடம் வேண்டுகிறேன் என்று சொல்லி, அன்னையிடம் அழுது ஜெபித்தேன். நல்லபடியாக அடுத்த மாதமே அவள் கருவுற்றாள். இப்பொழுது அந்த குழந்தைக்கு ஆறு மாதம் ஆகிறது. அதேபோல் எனது அக்காவின் மகளுக்கு 10 ஆண்டுகளாக குழந்தை இல்லாமல் இருந்தது. அன்னை மரியாளிடம் வந்து நான் சண்டை போட்டேன், என் மகளுக்கு ஒரு குழந்தை கொடுங்கள் என்று. கடந்த டிசம்பர் மாதம் இரண்டாம் தேதி அவளுக்கு ஒரு அழகிய குழந்தையை கொடுத்திருக்கிறார். மாதாவுக்கு கோடான கோடி நன்றிகள். *இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!*

**குழந்தை வரம் வேண்டி ஜீவ மாதாவிடம் ஜெபம்**

புனித ஜீவ மாதாவே! குழந்தை வரம் பெற்றுத் தரும் அன்னையே, குழந்தை இல்லாமல் தவிக்கும் எங்கள் மீதும் அனைத்து தம்பதியர் மீதும் உம் திருமகன் இரக்கம் கொண்டு குழந்தை செல்வம் அருள பரிந்து பேசியருளும்.

வல்லமை மிக்க உமது பரிந்துரையின் மீது நம்பிக்கை வைத்து மன்றாடும் எங்களை கண்ணோக்கியருளும்.

உம் திருமகனால் ஆகாதது ஒன்றுமில்லை. சாரா, ராக்கேல், அன்னா, எலிசபெத் ஆகியோருக்கு முதிர்ந்த வயதிலும், கருவுற இயலா நிலையிலும் மழலை செல்வம் தந்து மகிழ்வித்த இறைவன் எங்களுக்கும் குழந்தை வரம் தந்து எம் குடும்பத்தை மகிழ்ச்சியால் நிரப்பிட எங்களுக்காக மன்றாடியருளும் தாயே! ஆமென்.



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

அருட்பணி. லீபன் டேவிட். மஊச
சோழிங்கநல்லூர், சென்னை

ஜனவரி மாதம் 3 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவமாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**1. கார்மேல் நிவேதா -வியாசர்பாடி**

எனக்கு திருமணம் ஆகி ஓராண்டு காலமாக குழந்தை இல்லை. ஜீவ மாதாவிடம் வந்து ஜெபித்து என்னுடைய ஜெபங்களை வைத்தேன். தொடர்ந்து ஏழு மாதங்கள் இங்கு வந்தேன். நான் கருவுற்று இப்பொழுது ஜீவ மாதா எனக்கு ஒரு அழகிய பெண் குழந்தை கொடுத்திருக்கிறார். *இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!*

**2. மரியா- சோழிங்கநல்லூர்**

2024 ஆம் ஆண்டு கோயம்புத்தூரில் இருந்து இங்கு வந்தோம். எனக்கு வெரிகோஸ் வெயின் (*Varicose Vein*) இருந்தது. அதனால் இரண்டு கால்களும் வலிக்கும். இதை சரி செய்ய வேண்டுமென்றால் ஹைதராபாத்தில் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும், அதற்கு மூன்று லட்சம் செலவாகும் என்றார்கள். என்னால் நடக்கக்கூட இயலாது எரிச்சலாக இருக்கும். ஆதலால் ஆலயத்திற்கு கூட வந்து ஜெபிக்க முடியாது. குருவானவர் வீட்டிற்கு வந்து நன்மை கொடுத்தார். என்னால் வலி தாங்க முடியவில்லை, எந்த அளவுக்கு என்றால் தற்கொலை செய்யும் அளவுக்கு. இப்பொழுது ஜீவ மாதாவின் பரிந்துரையால் இயேசு கிறிஸ்து எனக்கு விடுதலை கொடுத்தார். *இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!*

**3. மேரி -சோழிங்கநல்லூர்**

என்னுடைய மாமியாருக்கு 68 வயது ஆகிறது. ஐந்து ஆண்டுகளாக இடது கண் பார்வை இல்லை. வலது கண் மூலமாக மட்டும்தான் பார்க்க இயலும். மருத்துவர் கூறினார், “அறுவை சிகிச்சைச் செய்தாலும் எந்த அளவுக்கு பார்வை இருக்கும்” என்று கூற முடியாது என்றார். ஆதலால் நாங்களும் விட்டு விட்டோம். இப்போது வலது கண்ணிலும் கட்டி இருப்பதால் பார்வையில்லை மருத்துவர் சொன்னார், “இரண்டு கண்களும் கண்டிப்பாக அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் ஆனால் எந்த அளவுக்கு பலம் இருக்கும் என்று சொல்ல முடியாது” என்றார். அப்பொழுது எனது மாமியாருக்கு வலி அதிகமாக இருக்கும். அவர்கள் ஒவ்வொரு நாளும் ஜீவ மாதாவிடம் ஜெபமாலை ஜெபித்துக் கொண்டே இருப்பார்கள். அறுவை சிகிச்சை செய்த பிறகு இரண்டு கண்களும் இப்பொழுது நன்றாக தெரிகிறது. மருத்துவர்கள் கூட நம்ப முடியாத அளவுக்கு ஜீவ மாதா ஒரு அதிசயத்தை புரிந்துள்ளார். *இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!*

**4. மரிய திரவியம் -சோழிங்கநல்லூர்**

கடந்த ஏப்ரல் மாதம் 2025 ஆம் ஆண்டில் எனக்கு இதயத்தில் மூன்று அடைப்புகள் ஏற்பட்டது. அதில் இரண்டு அடைப்புகளைதான் அடைக்க முடியும் என்று மருத்துவர்





# மரியாவின் ஆன்மீகம்

அருள்பணி. குழந்தைசாமி ம.ஊ.ச
முறைமாநில அதிபர்



## அன்னை மரியாவின் கற்றலும் ஆன்மீகமும்

அன்னை மரியாவின் ஆன்மீகம் உன்னதமான, உயர்வான, ஏன் அனைத்திற்கும் மேலாக உண்மையானது என்றால் மிகையாகாது. இருப்பினும் இன்னும் திருஅவையின் உறுப்பினர்களிடையே வழிபாடு, ஆன்மீகம் மற்றும் பக்தி முயற்சிகளை சார்ந்த தெளிவின்மை பரவலாக இருப்பதை நாம் அறிந்தும், கண்டுகொள்ளாமல் மெத்தன நிலையில் இருப்பதும், திருஅவையின் படிப்பினைகளை நாம் இன்னும் ஆழமாக அறிந்து, உள்வாங்கி, உணர்த்து வாழ்வியலாக மாற்ற தவறியதன் வெளிப்பாடு என்பதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ இயலாது.

ஆக கிறிஸ்துவின் நம்பிக்கையாளர்கள் அனைவரும் பங்கேற்கும் திருவழிபாட்டு கொண்டாட்டங்களும், கடைப்பிடிக்கும் பக்தி முயற்சிகளும் வெறுமனே வெளி ஆடம்பரத்தை மையம் கொண்டதல்ல. இவை அனைத்தையும் கடந்து நமது அன்றாட கிறிஸ்துவ வாழ்வு “இயேசு கிறிஸ்துவின் விழுமியங்களை” பிரதிபலிக்கும் உன்னத அருட்சாதனங்களாக வடிவம் பெற்றிட அன்னையின் ஆன்மீகம் அனைவருக்கும் அறைகூவல் விடுக்கிறது. ***“One of the main objectives of Christian liturgy is to transform our life into a living liturgy”.***

ஆன்மீகம் என்பது தூய ஆவியாரின் வழிமுறைகளை உள்ளடக்கிய மகத்தான வாழ்வியல் ஆகும். ஆக, தூய ஆவியாரின் வல்லமையால் நிரப்பப்பட்ட அன்னை மரியா, தனது புரியாமையை உணர்ந்து ஏற்க்கின்றார். வானதூதரின் துணைக்கொண்டு தெளிவுப் பெற்று, முழுமனதோடு “உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்” என மொழிந்து முனைப்போடு செயல்பட்டு சிறந்து விளங்கியதால் நம் ஒவ்வொருவரின் சீடத்துவ ஆன்மீகத்திற்கு அன்றே வித்திட்டார். ஆக, அன்னை மரியாவின் கற்றலும் கற்பித்தலும் நமது அன்றாட கிறிஸ்துவ வாழ்வில் வடிவம் பெற்றிட, வளம் கண்டு மகிழ்ந்திட, தொடர்ந்து பயணிப்போம்! அச்சம் வேண்டாம்!! ஆண்டவர் என்றும் நம்மோடு!!!

# அன்னை மரியாவின் திருப்பயணங்கள்

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
செர்வைட் தலைமையகம், சென்னை.

### பயணம் ஆறு

**தொடக்கவுரை**

"இதோ உமது அடிமை உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும்" என்று பணிந்த மரியாவின் வாழ்வில் அவர் மேற்கொண்ட பயணங்களும் இறைத்திருவுளத்தின்படியே நிகழ்ந்தன. இறைவனின் மீட்புத் திட்டம், அவரது திருச்சட்டம் அன்னையின் இப்பயணங்களில் வெளிப்படுகிறது. ஆண்டின் முதல் மாதம் கடந்து புதிய மாதம் மலர்ந்துள்ளது. இம்மாதத்தில் மூன்று நாட்களில் அன்னை மரியாவை சிறப்பாக நினைவுகூர அழைக்கப்படுகிறோம். பெப்ருவரி இரண்டாம் நாள் ஆண்டவர் இயேசுவைக் கோவிலில் காணிக்கையாக ஒப்புக் கொடுக்கப்பட்டதைக் கொண்டாடுகிறோம். இவ்விழா மரியாவின் சுத்திகரத் திருவிழா என்றும் அழைக்கப்பட்டது. குழந்தை இயேசுவை அர்ப்பணிக்கும் முன் மரியாவுக்குத் தூய்மைச் சடங்கு நிறைவேற்றப்பட்டது. பின்னர் தன் மகனை தந்தை இறைவனுக்கு தலைமைக் குரு வழியாக அர்ப்பணிக்கின்றார். இவ்வாறு திருச்சட்டத்தை நிறைவேற்றுவதில் நம் அன்னை நமக்குப் பெரும் மாதிரியாக இருக்கிறார். இந்நாள் உலக அர்ப்பணிக்கப்பட்டோரின் தினமாகவும், தம்மை முற்றிலும் கையளித்தவர்களாய் வாழவும் மரியாவைப் போன்று உள்ளம், உடல், சிந்தனை, சொல் ஆகியவற்றில் தூய்மையுடையவர்களாய் இருக்கவும் இறைவனின் அருளில் என்றும் நிலைத்திருக்கவும் நாம் அழைக்கப்படுகிறோம்.

லூர்து அன்னையின் நினைவு நாளை இம்மாதம் 11 ஆம் நாள் சிறப்பிக்கின்றோம். செபத்திலும் தவத்திலும் நம்மை நிலைத்திருக்க அழைப்பு விடுத்து, வெற்றி தரும் செபமாலையை தினமும் செபிக்கப் பணிக்கின்றார் லூர்து நகர் நாயகி. 'நானே அமல உற்பவம்' என்று தனது பெயரைக் கேட்ட பெர்னதெத்து வழியாக உலகம் தனது பேறுபெற்ற கருணையை அறியச் செய்தார். மூன்றாவதாக இம்மாதம் 17 ஆம் நாள் மரியின் ஊழியர் சபையைத் தோற்றுவித்த ஏழு புனிதர்களின் விழாவை சிறப்பிக்கின்றோம். புனித வியாகுல அன்னை தாமே இவர்களுக்கு காட்சி அருளி இச்சபையைத் தோற்றுவிக்கப் பணித்ததாக 13 ஆம் நூற்றாண்டிலிருந்து இச்சபையினரால், மக்களால் நம்பப்படுகிறது. எனவே இம்மாதம் அன்னை மரியா பல வகைகளில் நம்மைச் சிந்திக்க வைத்து அவர் சென்ற பாதையில் நம்மையும் பயணிக்க அழைக்கின்றார்.





மீட்க விரும்புகிறார்". இது இன்றைய நாட்களுக்கும் பொருந்தும், நம் வாழ்விற்கு அர்த்தமும், பொருளும் வழங்கும் ஒரு வார்த்தையாக இருக்கிறது. இறுதியாக, கடவுள் தன் மகனின் மூலம் பேசினார். அந்த மகனை அவர் அனைத்திற்கும் வாரிசாக நியமித்தார். அவரின் மூலம் உலகையும் படைத்தார். கிறிஸ்தவர்களாகிய நமக்கு கடவுளின் இறுதி உண்மையான வார்த்தை **"இயேசு கிறிஸ்துவே"**.

அந்த இயேசு யார்? கொலோசியருக்கான திருமுகத்தில் புனித பவுல் கற்றுக் கொடுப்பதுபோல், "அவர் காணமுடியாத கடவுளின் உருவம், அனைத்து படைப்புக்களுக்கும் முன்பிறந்தவர், ஆகவே காணமுடியாத கடவுள் காணக்கூடியவராக மாறினார். அவர் ஒரு உருவமாக வெளிபட்டார். இஸ்ரேல் மக்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக் கொண்டு வருகின்றார்.

மற்றொரு முக்கியமான திருவிவிலிய அடிப்படைக்கூறு என்னவென்றால், கடவுள் வெளிப்படும் இடமே 'புனிதத் திருத்தலமாக' மாறுகிறது. கடவுள் தன்னை வெளிப்படுத்தும் அந்த இடம் ஒரு இடமாக மட்டுமல்ல, புனித நிலமாக மாறுகிறது. மோசேயிடம் கடவுள் கூறியதை நாம் நினைவுக் கூறலாம்: "நீ இங்கே அணுகி வராதே, உன் பாதங்களிலிருந்து மிதியடிகளை அகற்றிவிடு, ஏனெனில், நீ நின்று கொண்டிருக்கின்ற இந்த இடம் புனிதமான நிலம்". (வி.ப. 3:5)

அப்படியானால் நம் மூதாதையர்கள் என்னச் செய்தார்கள்? கடவுள் தன்னை வெளிப்படுத்திய அந்த இடத்தையே 'நினைவுச் சின்னமாக' அதாவது ஒரு 'திருத்தலமாக' அமைத்தார்கள். ஆண்டவர் ஆபிரகாமிற்கு தோன்றி, "இந்த நாட்டை உன் சந்ததிக்கு அளிப்பேன்" என்றுக் கூறினார். அப்பொழுது தமக்குத் தோன்றிய ஆண்டவருக்காக, அந்த இடத்திலேயே ஆபிரகாம் ஒரு பலிபீடம் கட்டினார்.

யாக்கோபும் அந்தச் செயலை செய்தார். கடவுள் அவரிடம், "எழுந்து பெத்தேலுக்குச் சென்று, அங்கு உனக்குத் தோன்றிய கடவுளுக்காக, ஒரு பலிபீடம் கட்டு" என்றுச் சொன்னார். சாலமோனும் எருசலேமில், மோரியா மலையில் தன் தந்தை தாவீதுக்கு ஆண்டவர் தோன்றிய அந்த இடத்திலேயே, ஆண்டவரின் ஆலயத்தைக் கட்டத் தொடங்கினான். ஆகவே இது முழுமையாகவே விவிலிய மரபில் உள்ள ஒரு உண்மை என்பதை நாம் காண்கின்றோம். கடவுள் தன்னை வெளிப்படுத்தும் இடமே திருத்தலமாக மாறுகிறது. இதனால் தான் இன்று நாம் புனித உருவங்கள் வைத்திருப்பதற்கு அஞ்சுவதில்லை. இயேசுவின் உருவங்கள், மரியாவின் உருவங்கள், புனிதர்களின் உருவங்களை நாம் கொண்டிருக்கிறோம். ஏனெனில் கடவுள் தானே காணக்கூடியவராக, தொடக்கூடியவராக, அனுபவிக்ககூடியவராக மாறினார். அவர் ஒரு கற்பனை அல்ல.

இதுவே காரணம், கத்தோலிக்கரும், கிழக்கு மரபுத் திருஅவையினரும் (Orthodox) புனித உருவங்களை பயன்படுத்த அஞ்சுவதில்லை. காணக்கூடியவராக ஆன அந்த கடவுள், அனைத்தும் அவரால் படைக்கப்பட்ட அந்த இயேசு -படைப்பின் நடுநிலையாளர். கடவுள் கிறிஸ்துவில் காணக்கூடியவரானார். அந்த கிறிஸ்துவே நடுவில் நின்று மனிதருக்கும் கடவுளுக்கும் இடையிலான உறவின் முழுமையை வெளிப்படுத்துகிறார். இந்த உறவு 'முழுமை, நடுநிலையாளர்' இயேசு கிறிஸ்து வழியாக நமக்கு கொடுக்கப்படுகிறது. **தொடரும்.......**

# திருஅவை வரலாற்றில் மரியாள் காட்சிகள்

அருட்பணி. ஜெகநாதன் ம.ஊ.ச
பெங்களூர்

2



**கடந்த மாத தொடர்ச்சி....**

**3. விவிலியத்தில் காணப்படும் கடவுளின் வெளிப்பாடுகள்**

மரியண்ணையின் காட்சிகளின் அடிப்படை என்னவென்றால் தன் மகனின் வழியாக முழுமையாக தன்னை வெளிப்படுத்திய கடவுள், இன்று மரியாவின் வழியாக தொடர்ந்து வெளிப்படுத்திக் கொண்டு வருகிறார்.

விவிலியத்தில் கடவுளின் காட்சிகள் ஆதாம், ஏவாள் பாவத்திற்கு பிறகு தொடங்குகின்றன. பாவத்தின் முதல் விளைவு பயம். மனிதன் கடவுளிடம் இருந்து தன்னை மறைத்துக் கொள்கின்றான். ஆனால் கடவுள் மனிதனைத் தேடி "நீ எங்கே இருக்கின்றாய்" என்று அழைக்கின்றார். பாவம், கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையேயான உரையாடலை அழிக்க முடியாது. கடவுள் தமது மக்களுடன் தொடர்ந்து உரையாட விரும்புகின்றார். பாவத்திற்கு பிறகு கடவுள் தண்டனைக் கொடுக்கவில்லை, நம்பிக்கை வழங்குகின்றார். அவர் பாம்போடு உரையாடவில்லை. ஆனால் மனிதருக்கு நம்பிக்கையின் ஒளியை அளிக்கின்றார்.

இவ்வாறாக, நம்பிக்கைப் பயணம் ஆபிரகாமுடன் தொடங்குகிறது. ஆபிரகாமுக்கு கடவுள் தோன்றுகின்றார், நேரடியாக அல்ல உரையாடலின் வழியாக. *கத்தோலிக்க திருஅவையின் மறைக்கல்வி* என்ற புத்தகத்தின் எண் 44 கூறுகிறது: "ஆபிரகாமுடன் தொடங்கிய விசுவாச பயணம் மரியாவில் அது நிறைவை அடைகிறது. ஈசாக்கு, யாக்கோபு, மோசே அனைவருக்கும் கடவுள் தோன்றினார். மோசேவிற்கு கடவுள் தமது பெயரை வெளிப்படுத்தினார் "…..இருப்பவர் நானே" அதாவது எப்போதும் நம்பிக்கைக்குரிய கடவுள் நானே. மோசேவிற்கு கடவுள் கூறியது மிகவும் அழகானது: "என் மக்கள் எகிப்தில் அடிமைகளாக அழுகின்றனர், அவர்கள் துயரத்தை நான் கண்டேன்." அதனால் தான் கடவுள் மோசேயை அனுப்பி வைக்கின்றார்.

அதன்பின் இறைவாக்கினார்கள், இவர்கள் "காட்சி காண்போர்" (Visionary) என்றும் அழைக்கப்பட்டார்கள். ஆகவே கடவுளை காணுதல் மற்றும் அவரின் வார்த்தையை அறிவித்தல் ஆகியவற்றிற்கிடையே ஆழமான தொடர்பு உள்ளது. தன்னை வெளிப்படுத்தி பேசும் கடவுள் -அவரை காண்பவன் தான் 'இறைவாக்கினன்'. எபிரேருக்கான திருமுகத்தில் நாம் வாசிக்கின்றோம்: "பண்டைய காலங்களில் கடவுள் பலமுறை, பல விதங்களில் இறைவாக்கினர்கள் வழியாக நம் முன்னோரிடம் பேசினார்" (எபி: 1:1).

இந்த ஆய்வுகள், "காட்சிக் காண்போரின் இறைவாக்குரைக்கும் தன்மை" என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. அதாவது கடவுளைக் காண அழைக்கப்பட்டவர்கள், குறிப்பாக மரியா வழியாக கடவுளைக் காண்பவர்கள், அவர்கள் ஒரு இறைவாக்குரைக்கும் செய்தியை எடுத்துச் செல்கின்றார்கள். அந்தச் செய்தி பொதுவாக என்ன சொல்கிறதென்றால், "கடவுள் உன்னை





**யூதர்களின் பயணங்கள்**

யூதர்கள் தொன்று தொட்டு பல வகையான பயணங்களுக்குப் பெயர்போனவர்களாக இருக்கிறார்கள். நாடுகடத்தப்பட்ட நிலையில் பாதுகாப்பான இடத்திற்காக ஏங்கித் தவித்தார்கள். நாடோடி இனமாகவே காட்சியளித்தார்கள். வளமான, பொருளாதார நிலையை நாடி, சொந்த நாடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களாய் மற்றும் இறைவனைத் தேடித் திருயாத்திரிகர்களாய் பயணம் செய்து கொண்டு செல்வதை நாம் வரலாற்றில், விவிலியத்தில் காணமுடிகிறது. ஆபிரகாம் கானான் நாட்டுக்குப் பயணித்தது முதல் இஸ்ரயேல் இனம் எகிப்திலிருந்து விடுதலை பெற்று பாலைவனத்தில் ஒரு பெரிய கூட்டமைப்பாக மோசே தலைமையில் பயணித்தது ஒரு நெடும் பயணம். கி.பி. 70 ஆம் நூற்றாண்டில் எருசலேம் கோவில் தரைமட்டமாக்கப்பட்ட போது இவர்கள் உலகின் பல பாகங்களுக்கும் குறிப்பாக உரோமைப் பேரரசால் யூதர்கள் வட ஆப்பிரிக்கா, மத்திய கிழக்குப் பகுதிகளில் குடியேறினர்.

மத்திய நூற்றாண்டுகளில் வணிகத்திற்காகவும், தமது அறிவை, கலையை வளப்படுத்திக் கொள்ளும் பொருட்டும் ஐரோப்பாவிற்கும், ஆசியாவிற்கும் பயணம் செய்தனர். கி.பி. 1492 ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டிலிருந்து ஆடு, மாடு மேய்ச்சலில் ஈடுபட்டவர்கள் என்ற காரணத்தினால் அவர்கள் மீண்டும் ஆட்டோமான் பேரரசு, வட ஆப்பிரிக்கா, அமெரிக்கா போன்ற நாடுகளில் புலம்பெயர்ந்து செல்லக் கட்டாயப்படுத்தப்பட்டனர். இருபதாம் நூற்றாண்டில் ஒன்பது இலட்சம் யூதர்கள், முஸ்லீம்கள் வாழும் ஆப்பிரிக்கா, ஆசியா பகுதிகளிலிருந்து கட்டாயமாக வெளியேற்றப்பட, இஸ்ரயேல் என்ற நாட்டை தமக்கு உருவாக்கிக் கொண்டனர். இன்றும் இப்பயணங்கள் யூதர்களால் தொடரப்படுகின்றன. இஸ்ரயேல் நாட்டுக்கு பல பாகங்களிலிருந்து அவர்கள் திருப்பயணங்கள் மேற்கொள்கின்றனர். இவர்கள் எப்போதும் தொடக்கக்கால முன்னோடிகளின் திருப்பயண அனுபவத்தின் தொடர்ச்சியாகவே இப்பயணங்களைப் பார்க்கின்றனர்.

**மூன்று முக்கிய பயணங்கள்**

விவலியம், திருச்சட்டம், மரபு ஆகியவற்றின் அடிப்படையில் யூத ஆண்கள் எருசலேமில் உள்ள ஆலயத்தை மூன்று முறை தரிசிக்க வேண்டும். இப்பயணங்கள் அங்கு நடைபெறும் மூன்று விழாக்களின் போது மேற்கொள்ளப்படும். 1. வசந்த காலத்தில் இடம்பெறும் புளியாத அப்பத் திருவிழா. 2. ஷாவோட் என்று அழைக்கப்படும் அறுவடைத் திருவிழா, இளவேனிற்காலத்தில் நடைபெறும். 3. சுக்கோத் எனும் விழா இலையுதிர் காலத்தில் கொண்டாடப்படும் கூடாரத் திருவிழா. மூன்றும் கூட்டாக ஷாலோஷ் ரெகாலம் என்று அழைக்கப்படும். நற்செய்தியில் இவ்விழாக்கள் இடம்பெறுகின்றன. இயேசு இவ்விழாக்களில் பங்கேற்கிறார் என்பதை புனித யோவான் நற்செய்தியிலிருந்து அறிகிறோம். புளியாத அப்பத் திருவிழா ஏழு நாட்கள் சிறப்பிக்கப்பட்டன.

தம் மூதாதையரின் விடுதலைப் பயணத்தையும் ஆற்றல்மிக்க இறைவனின் செயல்பாடுகளையும் நினைவுகூர்ந்து இவ்விழாவை சிறப்பிப்பார்கள். நாமும் இயேசுவின் உயிர்ப்பு ஞாயிறன்று நாம் இந்த பாஸ்கா விழாவைக் கொண்டாடி தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ரயேல் இனம் பாரவோனின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்ட செயலை நினைவு கூறுகின்றோம், விடுதலை அல்லது *கடத்தல்* அதாவது இருளிலிருந்து ஒளிக்கும், சாவிலிருந்து வாழ்வுக்கும், அடிமைநிலையிலிருந்து விடுதலை வாழ்வுக்கும் கடந்து செல்ல வேண்டும் என்ற உறுதிபாட்டை தாய்த் திருஅவை நமக்கு அளிக்கின்றது. இத்தகைய பாஸ்கா விழாவிற்கு திருக்குடும்பம் ஆண்டுதோறும் சென்றது. இயேசுக்கு பன்னிரெண்டு வயது நடக்கும் போது இடம்பெற்ற திருப்பயணத்தை இங்கு நாம் ஆழ்ந்து சிந்திப்போம்.

**இயேசுவின் பாஸ்கா விழாப் பயணம்**

யூத மரபுப்படி பன்னிரெண்டு வயது நிரம்பிய ஒரு சிறுவன் பாஸ்கா விழாவைக் கொண்டாட எருசலேம் கோவிலுக்குச் செல்வதுண்டு. பதிமூன்றாம் வயது தொடங்கும்போது அவன் ஒரு முதிர்ச்சி நிலையை அடைகிறான். அவனுக்கு ‘தோரா” என்ற திருச்சட்டத்தை கரங்களில் ஏந்தும் பொறுப்பு வழங்கப்படும். அதன் பின்னர் எருசலேம் கோவிலில் திருச்சட்டங்களைப் பற்றிய அறிவை சமய அறிஞர்களிடமிருந்து கற்றுக் கொள்வது, கேள்விகள் கேட்பது போன்ற உரிமை வழங்கப்படும். இந்த நிலையை அடைய பன்னிரெண்டாம் வயது ஒரு தவத்துடன் கூடிய ஒரு தயாரிப்பு ஆண்டு என்று கூட சொல்லலாம். இந்த நிலை ‘பார் மிட்ஸ்வா” என்று அழைக்கப்படுகிறது. இந்த வயதில் தான் பாஸ்கா விழாவையொட்டிய சடங்குகளில் சட்டப்பூர்வமாக இவர்கள் பங்கெடுக்க முடியும். எருசலேம் கோவிலில் இளைஞர்களுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் அறிஞர்களிடம் திருச்சட்டம், மறைநூல் பற்றி உரையாடுவதற்கு வாய்ப்பும் அளிக்கப்பட்டது.

இயேசுவின் பயண நிகழ்வை தூய லூக்கா தமது நற்செய்தியில் மிக இழகாக விவரிக்கின்றார். ‘ஆண்டுதோறும் இயேசுவின் பெற்றோர் பாஸ்கா விழாவைக் கொண்டாட எருசலேம் போவார்கள். இயேசுவுக்கு பன்னிரெண்டு வயது ஆன போது வழக்கப்படி விழாவைக் கொண்டாட எருசலேம் சென்றனர்”. அன்னை மரியாவின் இந்தப் பயணம் மிகச் சிறப்பானது. மகிழ்ச்சியுடன் தம் உறவினர்களோடு இப்பயணத்தில் இணைந்தார். இந்த திருப்பயணங்களின்போது மக்கள் அனைவரும் திருப்பாடல்களை பாடிக் கொண்டு செல்வது வழக்கம். அருள்மிகப் பெற்ற மரியாவும் தன் மகனோடு விடுதலைப் பயண வரலாற்றை விளக்கிக் கொண்டு சென்றிருப்பார்.

நாசரேத்திலிருந்து எருசலேம் செல்ல திருக்குடும்பம் மூன்று இல்லது நான்கு நாட்கள் எடுத்திருக்க வேண்டும். 75 மைல்கள்

தொடர்ச்சி 27 ம் பக்கம்...........





கடவுளின் இரக்கத்தை பெற்றுக் கொண்டதை தெளிவாக காட்டுகிறது. அவ்வாறெனில் சுதனாகிய இறைவனை தன் வயிற்றில் சுமந்து பெற்ற அன்னை மரியா நமக்காக பரிந்துரைப்பார் என்றால் நாம் கடவுளின் இரக்கத்தை உறுதியாக பெறமுடியும். அன்னை மரியாவின் மீது உண்மையான பக்தி கொண்டு அவர்களே நம் அடைக்கலம் என்று நம்மையே முழு சரணாகதியாக மாமரி தாயிடம் ஒப்புக்கொடுக்கும் போது, அவர்களின் முழுமையான பாதுகாப்பிற்குள் நாம் செல்கிறோம்.

மாமரி மீதான உண்மை பக்தி ஒருவரிடத்தில் தொடங்கும் போது பாவத்தின் இரவுக்கு முடிவு கட்டி, புண்ணிய பாதையின் பிரகாசமுள்ள ஒளிக்குள் நம்மை அவர் நடத்திச் செல்கிறார். இதனால் தான் புனித ஜெர்மானுஸ், ஓ இறைவனின் மாதாவே, உங்கள் பாதுகாவல் ஒருபோதும் நின்று போவதில்லை, உங்கள் பரிந்துரை வாழ்வாக இருக்கிறது. உங்கள் பாதுகாவல் ஒருபோதும் தவறுவது இல்லை’ என்று செபித்தார்.

**மதுரமான மாமரித் தாய்:**

புனித கிரேத்தா பிலவேந்திரர் மாமரியைத் தேவ இரக்கத்தின் வாக்குத்தத்தம் என்று அழைக்கிறார். இது ஏனென்றால், பாவிகள் மாமரியிடம் அடைக்கலம் தேடும்போது, அவர்கள் கடவுளோடு ஒப்புரவாகி, மன்னிப்பு மற்றும் சமாதானம் ஆகியவற்றின் உறுதிபாட்டைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

மாமரியின் பரிசுத்த வாழ்வின் தாழ்ச்சியாலும், மாசற்றத்தனத்தாலும், நம் ஆண்டவர் தாமே சாந்தப்படுத்தப்படுவார் என்றும் பாவத்தால் சேசுவின் கோபத்தை தூண்டியவர்களோடு மீண்டும் தம்மை ஒன்றித்துக்கொள்வார் என்பதையும் புனிதர்கள் அறிந்து அக்களிப்புக் கொண்டார்கள் என்று ஒரு வானதூதர் கூறுவதை புனித பிரிஜத்தம்மாள் கேட்டாள்.

மாமரி ஒரு முறை தன்னுடைய மேற்போர்வையை விரித்திருப்பதையும், அதன் கீழ் சிங்கங்கள், கரடிகள் மற்றும் புலிகள் போன்ற பல காட்டு மிருகங்கள் அடைக்கலம் புகுந்திருப்பதையும், மாமரி அவற்றை வரவேற்று, சாந்தமுள்ள அன்போடு அவற்றை வருடிச் சீராட்டுவதையும் தான் கண்டதாக புனித ஜெர்த்ரூத்தம்மாள் குறிப்பிடுகிறாள். இதனால் மாமரி எத்தகைய இனிமை மிக்க அன்னையாக இருக்கின்றார்கள் என்பதையும், அவர்களுடைய அன்பும் அரவணைப்பும் சீராட்டுதலும் நமக்கு கிடைக்கும் போது நமக்கு எவ்வளவு இனிமையாக இருக்கும் என்பதையும் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. எனவே மாமரியே நம்முடைய மதுரமாக இருக்கின்றார்கள்.

மிகவும் மதுரமான அன்னை மாமரியை இந்த பிப்ரவரி மாதத்தில் நம்மால் முடிந்த ஏதாவது ஒருசில செபங்களை பக்தியோடு சொல்லி அல்லது தினந்தோறும் ஐம்பத்து மூன்று மணி செபம் செய்து தொடர்ந்து அன்னையை வாழ்த்துவோம்! கடவுளின் கருணையை பெற்றுக்கொள்வோம்.

எங்கள் ஜீவியமே! எங்கள் தஞ்சமே! எங்கள் மதுரமே! வாழ்க!



## பொதுநிலையினர் பார்வையில் அன்னை மரியாள் 16

திரு. தா.சுரேஷ், பூம்பொழில் நகர், சென்னை

அன்னையின் அன்புப் பிள்ளைகளே! சென்ற இதழில் அன்னையின் இரக்கத்தைப் பற்றி சிந்தித்து, அன்னை மரியாவை எவ்வாறு அன்பு செய்யலாம் என்று சிந்தித்தோம். இப்போது நம்முடைய வாழ்வாகவும், நம்முடைய அடைக்கலமாகவும், நமக்கு மிகவும் இனிமையானவராகவும் இருக்கும் அன்னை மரியாவை பற்றி சிந்தித்து அன்னையை அன்பு செய்ய முயற்சி செய்வோம்.

**மாமரியே நம் வாழ்வு:**

ஜென்ம பாவத்திற்கு பிறகு, கடவுள் உலகை அழிக்கவில்லை என்றால், அதற்கு காரணம் மனித குலத்தில் பிறக்கவிருந்த பரிசுத்த கன்னி மாமரி மீது அவர் கொண்டிருந்த தனிப்பட்ட அன்பே என்பது புனித சியென்னா பெர்னார்தீனின் கருத்தாகும். இதன் அடிப்படையில் இன்று நாம் வாழ்வதும் அன்னை மரியாவினால் தான் என்பதையும் நாம் உணர்ந்து கொள்ளலாம். நம்முடைய உடலில் உயிர் இல்லை என்றால் நாம் இறந்தவர்களாக கருதப்படுவோம். அதுபோல ஆன்மாவில் இறையருள் இல்லை என்றால் நம்முடைய ஆன்மா இறந்ததாகவே கருதப்படும். ஆன்ம ஈடேற்றத்திற்கான அனைத்து அருள் வரங்களையும் அன்னை மரியாவை நாம் நம்பிக்கையோடு நாடும் போது நம்முடைய ஆன்மாவிற்கு தேவையான அனைத்து அருள் வரங்களையும் மாமரி நமக்கு பெற்றுத் தருகிறார்கள் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. நீதி மொழிகள் 8:35 'என்னைத் தேடி அடைவோர் வாழ்வடைவர்: ஆண்டவரின் கருணை அவர்களுக்கு கிடைக்கும்' என்று கூறுகிறது. இது அன்னை மரியாவுக்கு மிகவும் பொருத்தமாக உள்ளது. எனவே மாமரியே நம் வாழ்வு.

**மாமரியே நம் அடைக்கலம்:**

அடைக்கலம் யாருக்கு தேவைப்படும்? நம்பிக்கையை இழந்தவர்களுக்கு தேவைப்படும்: பாவிகளுக்கு தேவைப்படும்: துன்பத்தில் ஆறுதலின்றி இருப்பவர்களுக்கு தேவைப்படும்: இத்தகையோர்கள் தாங்களே கடவுளிடம் நேரடியாக இரக்கத்தை நாடி செல்லுவதை விட வல்லமையுள்ள ஒரு பரிந்துரையாளரை துணைக்கு அழைத்துக்கொண்டு செல்லுவது கடவுளுடைய இரக்கத்தை உறுதியாக பெற முடியும். 'ஆபிரகாம் கடவுளிடம் மன்றாடவே, கடவுளும் அபிமெலக்கையும் அவன் மனைவியையும் அடிமைப் பெண்களையும் குணமாக்கி அவர்களுக்குப் பிள்ளைப்பேறு அளித்தார்' (தொ.நூ. 20:17) என்னும் இறைவார்த்தை, ஆபிரகாமின் பரிந்துரையினால் அபிமெலக்கும் அவன் குடும்பத்தாரும்





## அன்னையின் 85 திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.



**புனித வியாகுல அன்னை ஆலயம் - திருச்சூர், கேரளா**

தென் இந்தியாவின் கேரளாவில் உள்ள திருச்சூர் மாவட்டத்தின் தலைநகர் திருச்சூர் ஆகும். கேரளாவில் உள்ள ஐந்தாவது பெரிய நகரமாகும். இந்நகர் கேராளாவின் தலைநகர் திருவனந்தபுரத்திலிருந்து 200 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூரில் புத்தன்பள்ளி என்று மலையாளத்தில் என்ற அழைக்கப்படும் புனித வியாகுல அன்னை பேராலயம் உள்ளது. இப்பேராலயம் கத்தோலிக்க திருஅவையை சார்ந்த சிரோ-மலபார் திருஅவையை சார்ந்ததாகும். இவ்வாலயம் இந்தியாவின் மிக உயரமான ஆலயமாகவும், ஆசியாவின் மூன்றாவது உயரமான ஆலயமாகவும் திகழ்கிறது.



இந்த ஆலயத்தின் மேன்மையையும், அங்கு பாதுகாவலியாக வீற்றிருந்து நமக்கு பரிந்து பேசும் வியாகுல அன்னையின் மகிமையையும் அறிந்து கொள்வதற்கு முன் சிரோ-மலபார் திருஅவையையும், அது எங்ஙனம் கத்தோலிக்க திருஅவையின் அங்கமாக உள்ளது என்பதையும் அறிந்து கொள்ளுதல் நலம் பயக்கும் என கருதுகிறேன். இன்று உரோமன் கத்தோலிக்க திருஅவையில் திருத்தந்தையின் தலைமையை ஏற்றுக் கொண்ட இலத்தீன் வழிபாட்டு முறையைப் பின்பற்றும் (மேற்கத்திய) திருஅவை, மற்றும் 23 கீழைத் திருஅவைகள் உள்ளன. சுருக்கமாக கூறுவதெனில், இறைமகன் இயேசுவின் இறைவார்த்தைகளை நம்பி, அவரது பிறப்பு, பாடுகள், இறப்பு மற்றும் உயிர்ப்பு என்ற நமக்கு மீட்பளிக்கும் நிகழ்வுளை ஏற்று கொண்டு, அதை நற்செய்தியாக திருத்தூதர்கள் அறிவித்தனர். அதை ஏற்றுக்கொண்ட அனைவரும் திருமுழுக்கு பெற்று புனித பேதுருவின் தலைமையில் திருஅவையாக உருவெடுத்தது. ஆரம்ப காலக்கட்டங்களிலிருந்தே பல்வேறு தப்பறை கொள்கைகளும், பிரிவினை சக்திகளும் திருஅவைக்குள் இருந்து கொண்டே இருந்தது என்பதை வரலாறு கூறும் உண்மை. கி.பி. 313ஆம் ஆண்டு பேரரசர் கான்ஸ்டன்டைன் அவர்களால் இயற்றபற்ற மிலான் சாசனம் கிறிஸ்தவ மதத்திற்கு அங்கீகாரம் அளித்தது. அதன்பின், கி.பி. 380ஆம் ஆண்டு பேரரசர் தியோடிசியுஸின் தெசலோனிக்கா சாசனம் கிறிஸ்தவ மதத்தை அரச மதமாக அறிவித்தது. பல்வேறு பகுதிகளில் பரவி வாழ்ந்த கிறிஸ்தவர்களையும், அவர்களது பன்முகத்தன்மையுள்ள சிந்தனைகளையும் ஒருங்கிணைத்து வளர்க்க மேற்கத்திய திருஅவை, கீழை திருஅவை, ஒருங்கிணைக்கப் பெற்ற திருஅவைகள் என்ற பல நிலைகளில் பல்வேறு திருச்சங்கங்கள் நடைபெற்றுள்ளன. கத்தோலிக்க திருஅவையில் ஏற்பட்ட மிகப்பெரிய பிளவு கி.பி.

1054ஆம் ஆண்டு ஏற்பட்ட பிளவு ஆகும். இது திருஅவையை உரோமன் கத்தோலிக்க திருஅவை மற்றும் கீழைத் திருஅவை என்று பிரித்தது. இப்பிரிவினைப் பற்றி நுணுக்கமாக அறிந்து கொள்ள பல்வேறு தரவுகள் தரப்படவேண்டுமென்பதால், இப்படி ஒரு வரலாற்று நிகழ்வு நடந்தது என்கிற செய்தியை மட்டும் பகிர்ந்து கொள்கிறேன். இது ஒருபுறம் இருக்க, சிரோ-மலபார் திருஅவை தங்களின் தொடக்கத்தை திருத்தூதர்களின் நற்செய்தி அறிவிப்பு பணி காலத்திலிருந்து தொடங்கியதாக கருதுகின்றனர். அதுவும் திருத்தூதரான தோமாவின் வழித்தோன்றலாக தங்கள் திருஅவை இருப்பதாக கூறுகின்றனர். இவர்கள் கீழை சிரிய வழிபாட்டு முறையை கடைபிடிக்கின்றனர். தொடக்க காலத்தில் உரோமை திருஅவையுடன் ஒருங்கிணைந்து செயல்பட்ட இவர்கள், காலப்போக்கில் பல்வேறு கருத்து வேறுபாடுகள் காரணமாக உரோமை திருஅவையிலிருந்து விலகி நின்றனர். கி.பி. 1552 ஆம் ஆண்டு கீழை திருஅவையில் ஏற்பட்ட ஒரு பிளவில், ஒரு பகுதியினர் உரோமை கத்தோலிக்க திருஅவையுடன் உறவை பேணி, ஒருங்கிணைந்து செயல்பட முடிவெடுத்தனர். அவர்களை கல்தேயன் கத்தோலிக்க திருஅவை என்றழைத்தனர். மலபார் திருஅவை கல்தேயன் திருஅவையின் கீழ் செயல்பட்டு வந்தனர். கி.பி. 1599ஆம் நடைபெற்ற தியாம்பெர் ஆயர் மன்றம், மலபார் திருஅவையை கல்தேயன் திருஅவையிலிருந்து விடுவித்து, கிராங்கனூர் உயர்மறைமாவட்டமாக அறிவித்து, அவர்களை பதுருவாதோ போர்த்துகீசிய ஆளுகைக்கு உட்பட்டதாக அறிவித்தது. ஆனால், மலபார் திருஅவை பதுருவாதோ அமைப்பின் கீழ் தங்களின் தனித்துவம் ஒடுக்கப்படுவதாக கருதி, எதிர்ப்பு தெரிவித்தனர். பதுருவாதோ ஆளுகைக்கு உட்படமாட்டோம் என்று $ wp ‘கூனாம் சிலுவை வாக்குறுதியை’, அளித்து உரோமை திருஅவையின் அதிகாரத்திலிருந்தும், ஐக்கியத்திலிருந்து விலகுவதாக அறிவித்தனர். கி.பி. 1662ஆம் ஆண்டு திருத்தந்தை ஏழாம் அலெக்ஸாண்டர் பெருமுயற்சி எடுத்து, அவர்களோடு பேசி, அவர்களுடன் பணியாற்ற கார்மல் சபை துறவிகளை அனுப்பி வைத்தார். படிப்படியாக, ஒருங்கிணைக்கும் முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. இக்காலக்கட்டத்திலும் இத்திருஅவையில் மற்றொரு பிளவு ஏற்பட்டது. அதில், கத்தோலிக்க திருஅவையுடன் ஒற்றுமையையும், ஒருங்கிணைப்பையும் ஏற்றுக்கொண்ட குழுவினர், ‘பழையகூத்துகார்’ என்றழைக்கப்படுகின்றனர். கி.பி. 1923ஆம் ஆண்டு திருத்தந்தை பதினோராம் பயஸ், சிரோ-மலபார் ஆயர்மன்றத்திற்கு மீண்டும் புத்துயிர் அளித்தார். தற்போது, கீழைத் திருஅவையின் மிகப்பெரிய கத்தோலிக்க திருஅவையாக இது உள்ளது. உலகம் முழுவதும் சிரோ-மலபார் திருஅவையின் உறுப்பினர்களாக ஏறக்குறைய 45 இலட்சம் கிறிஸ்தவர்கள் உள்ளனர்.

ஆலயத்தின் முதல் கட்டிடமானது கி.பி. 1814ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கோட்டை வாயில்களுக்குள் உள்ள திருச்சூரில் உள்ள முதல் கிறிஸ்தவ ஆலயம் என்ற பெருமையினையும் பெறுகின்றது. புனித அந்தோணியருக்கான சிரோ-மலபார் ஆலயம் ஒல்லூரில் கி.பி. 1718ஆம் ஆண்டு திருச்சூர் நகராட்சியில் கட்டப்பட்டது. இது பல ஆண்டுகளாக இப்பகுதியில் உள்ள புனித தாமஸ் கிறிஸ்தவர்களுக்கு ஒரு மையமாக இருந்தது. கி.பி. 1874ஆம் ஆண்டில் சிரோ-மலபார் கிறிஸ்தவர்களில் வேண்டுகோளின் பேரில் கல்தேய கத்தோலிக்க ஆயர் எலியாஸ் மெல்லஸ் இந்தியாவிற்கு வந்து கிறிஸ்தவ சமூகத்தின் பெரும்பகுதியினர் தன்னைத ஆயராக ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டார். அதன்படி ஆயர் மெல்லஸைப் பின்பற்றிய அடிப்படையாகக் கொண்டு வளர்ந்து வந்தது. இறுதியில் அக்குழு, கத்தோலிக்க ஆன்மீகக் கூட்டுறவிலிருந்து பிரிந்து, தற்போது கல்தேய சிரிய ஆலயம் என்று அழைக்கப்படுகிறது. இதற்கு பதிலளிக்கும் விதமாக சிரோ-மலபார் கத்தோலிக்கர்கள் கி.பி. 1929ஆம் ஆண்டு ஒரு புதிய ஆலத்தை கட்டினார்கள், பழைய ஆலயம் மார்ட் மரியம் பெரிய ஆலயம் என்று பெயரிடப்பட்டு அதை கல்தேய சிரியர்கள் பராமரிக்கிறார்கள். புதிய ஆலயம் புத்தன்பள்ளி (புதிய ஆலயம்) என்று அழைக்கப்படுகிறது.





8-ம் பக்க தொடர்ச்சி.........

சென்றிருக்க வேண்டும். தனியாக இப்பயணத்தை மேற்கொள்ள முடியாது. திருடரின் பயம் நிறைந்தது. எனவே வணிகர்கள், படைவீரர்களோடு சேர்ந்து திரியாத்திரிகர்கள் கூட்டம் தம் உறவினர்களோடு செல்வதுண்டு. பயணம் செய்யும் நாட்கள், தங்கும் நாட்கள் சேர்ந்து இரண்டு வாரம் என்று சொல்லப்படுகிறது. ஆண்கள் தான் இவ்விழாவில் பங்கு பெற வேண்டும் என்ற திருச்சட்டம் அறிவுறுத்தினாலும் பக்தியுள்ள பெண்களும் அனுமதிக்கப்பட்டனர்.

ஜெஸ்ரீல் தரை வழியாகவும், யோர்தான் பள்ளத்தாக்கு வழியாகவும் இப்பயணம் அமைந்திருக்க வேண்டும். திருப்பயணிகள் அனைவரும் 120 முதல் 134 வரையிலான 15 திருப்பாடல்களையும் பாடிக்கொண்டு மகிழ்வுடன் சென்றனர். இவைகள் சீயோன் மலை திருப்பயணப் பாடல்கள் என்று அழைக்கப்படுகின்றன. ‘ஏறும் பாடல்கள்” என்றும் கூறப்படுகின்றன. இப்பாடல்கள் இறைவனுக்கு நன்றி கூறுதல், அவரின் பாதுகாப்பு, அவர் உறையும் ஆலயத்திற்கான ஏக்கம் இவற்றை உள்ளடக்கியதாக அமைந்திருக்கின்றன. திருப்பாடல்கள் வெகு சிறப்பாக 121 ‘மலைகளை நோக்கி என் கண்களை உயர்த்துகிறேன். . . . ஆண்டவரிடமிருந்தே எனக்கு உதவி வரும்” என்ற அவர்களின் இறை நம்பிக்கையை உணர்த்துகிறது. திருப்பாடல் 122, ‘ஆணடவரது இல்லத்திற்குப் போவாம் என்ற அழைப்பை நான் கேட்டபோது அகமகிழ்ந்தேன்” என்ற வரிகள் இறைவனைப் பற்றிய நினைவு எத்துணை மகிழ்வைத் தருகிறது என்பதை வெளிப்படுத்துகிறது. ஆண்டவர் மீது நம்பிக்கை வைத்துள்ளோர் சீயோன் மலை போல் என்றும் அசையாது இருப்பர் என்பது இறைவன் மீது நாம் கொண்டிருக்கும் நம்பிக்கையை எடுத்துக்காட்டுகிறது. இத்தகைய நம்பிக்கையும், எதிர்பார்ப்பும், ஆர்வமும் உள்ளடக்கிய பாடல்களை பாடியும் செபித்தும் சென்றார். இத்திருக்கூட்டத்தில் திருக்குடும்பம் ஒன்றித்தது.

எதிர்நோக்கின் திருப்பயணம் மீண்டும் தொடர்கிறது என்று திருத்தந்தை 14 ஆம் லியோ கூறுகிறார். எவ்வாறு இஸ்ரயேல் மக்கள் எருசலேமை, விண்ணகத்தின் முன் அடையாளமாகக் கருதி அதை நோக்கிப் பயணித்தார்களோ, அதைப் போன்று நாமும் புதிய எருசலேம் ஆகிய நமது விண்ணகத்தை நோக்கி முன்னேறுகிறோம் என்பதை இந்தத் திருப்பயணங்கள் நமக்கு அறிவுறுத்துகின்றன. திருப்பயணிகளின் வாழ்வில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். அவர்கள் புது மனிதர்களாய், புதிய விண்ணகத்தை இம்மண்ணகத்தில் ஏற்படுத்தியவர்களாய் தம்மை உருமாற்றிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் நாம் நம்பிக்கை என்னும் ஒளியை மற்றவர்களுக்கு வழங்க முடியும். நமது பயணங்களும் நம்பிக்கையுடன் தொடரட்டும்.

அவரை "கடவுளின் திருவுளம் நிறைவேற்றிய ஒளிவிளக்கு" என்று அழைக்கின்றோம்.

ஒரு அழகான ஓவியம், சுரூபம் தயாரிக்கும் சிற்பி, வெண்மை நிறமுடைய தந்தத்தை வைத்து அழகான உருவம் தயாரித்து, மக்களை வியப்பில் ஆழ்த்துவது போல, வல்லமையும் இரக்கமும் உள்ள இறைவன் அன்னை மரியாவை வைத்து தனதுத் திட்டத்தை நிறைவேற்றி, அடிமைகளையும் பாவிகளையும் மீட்டார். இறைவன் விரும்புகின்றார், திருவுளம் கொள்கின்றார் என்றதும், உடனே அதை ஏக மனதுடன் ஏற்று, அவர், "இதோ, ஆண்டவரின் அடிமை, உமது வார்த்தையின் படியே ஆகட்டும்" என்ற ஒரு கீழ்படிதல் உள்ள ஆன்மா அன்னை மரியாவிடம் மட்டுமே உள்ளது. இதனால்தான் கடவுள் அவரை உயர்த்தி, "இந்நாள் முதல் எல்லா தலைமுறையினரும் என்னை பேறுடையாள் ஏன்றிடுமே" என்ற அளவுக்கு கடவுள் மரியாவுக்கு அரும்பெரும் செயல்கள் புரிந்தார். இதனை நினைத்து அவரது ஆன்மா அவரை ஏற்றி போற்றுகிறது.

**அன்னையின் ஆன்மா -கடவுளில் மகிழ்ந்த ஒளிச்சுடர**

தான் பிறரை மகிழ்விக்க வேண்டுமெனில் முதலில் நான் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். அப்போது என்னைக் காண்பவர் மகிழ்ச்சியடைவர். நான் செல்லும் இடமெங்கும், எனது மகிழ்ச்சியின் விதையைத் தூவி, வறண்டுக் கிடக்கும் மனிதரின் உள்ளத்தை நிறைத்த மகிழ்ச்சியால் நிரப்ப முடியும். அடுத்ததாக, தான் எவற்றில் மகிழ்ச்சி அடைகிறேன் என்பதும் முக்கியம்.

எனது மகிழ்ச்சி அழிந்துப் போகும் உடலின் ஆசைகளை நிறைவேற்றி, அதில் சுகவாசம் அடைவதில் அடங்கியுள்ளதா? அல்லது நிலை வாழ்வை அளிக்கும் கடவுளின் திட்டத்தை நிறைவேற்றுவதில் அடங்கியுள்ளதா? எனது மகிழ்ச்சி பிறரை அடக்கி, ஒடுக்கி, அதிகாரம் செய்து தற்பெருமை அடைந்து சுயநலத்தில் வளர்வதில் உள்ளதா? அல்லது பிறர்படும் துன்பத்தில் பங்குகெடுத்து, உடைந்த உள்ளம் படைத்தவருக்கு உதவிச் செய்து, இயேசுவுக்காக வரும் துன்ப துயரங்களை தாங்கிக் கொண்டு, தனது ஆசையை துறந்து, இன்பத்தை நீக்குவதில் உள்ளதா? அன்னை மரியாவின் ஆன்மா கடவுளில் இணைந்து, மகிழ்ந்தது. இவ்வாறு கடவுளில் மகிழ்ந்த மரியா, எலிசபெத்தம்மாளை சந்தித்ததும், அவளும், அவளது குழந்தையும் மகிழ்ச்சியால் துள்ளியதை நற்செய்தி நமக்கு கூறுகிறது.

இவ்வாறு கடவுளில் மகிழ்ந்த ஆன்மா, தன் உள்ளத்தில் ஒரு வாள் ஊடுருவும் வகையில் இயேசுவின் இறப்பை தாயான அவள் தாங்குகின்றார். தன் மகனை விட்டு ஓடிய சீடர்களின் அவல நிலை, தன் மகனைக் காட்டிக் கொடுத்த துரோகி, தனது மகனை மறுதலித்த தைரியம் இல்லாத கோழை, தன் மகனை சிலுவையில் சுமத்திய கயவர்கள், அனைவரின் கைவிடுதல் நிலையை, துன்ப நிலையை, அன்னை மரியாள் தாங்கிக் கொள்கிறார் என்றால், கடவுளில் மகிழ்ந்த அவரது ஆன்மா பேராற்றல் மிக்கதாகும்.

இவ்வாறாக மரியாவின் ஆன்மா தூய்மையில் நிறைந்து, கடவுளில் இணைந்தது. அவரின் மடியில் தவழ விரும்பும் குழந்தைகள், பக்தர்கள் தங்களது ஆன்மாவை தூய்மையாக பார்த்துக் கொள்ள வேண்டும். அப்போது நமது வாழ்வு ஒளிபெறும் அதற்கான அருளை அன்னையிடம் மன்றாடுவோம்.






இந்தியாவின் மிகப்பெரிய தேவாலயமான இந்த ஆலயத்தின் கட்டுமானப் பணிகள் கி.பி. 1929ஆம் ஆண்டு தொடங்கி பல கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டது. ஆலயத்தின் முகப்பில் உள்ள இரண்டு கோபுரங்கள் ஒவ்வொன்றும் 146 அடி (45 மீ) உயரம் உடையதாக அமைந்துள்ளன. இந்த இரட்டை கோபுரங்களுக்கு மத்தியில் அழகான வேலைப்பாடுகளுடன் கூடிய மாடக்கோபுரங்களும் அவற்றின் மத்தியில் ஏழு வாள்களால் ஊடுருவப்பட்டு துன்பம் நிறைந்த முகத்துடன், ஆனால் கருணையை பொழியும் வதனத்துடன நிற்கும் வியாகுல அன்னையின் திருஉருவம் தொலைவிலிருந்து வருவோருக்கு காட்சி தந்து அருள்பாலிப்பதாக அமைந்துள்ளது. இந்த கோபுரங்களை கட்டும் சவால் நிறைந்த பணிகளை செய்துமுடிப்பது கட்டிடக்கலையினருக்கு மிகப்பெரிய சவாலாக இருந்தது. இப்பணிகளை நிறைவுசெய்ய பல கட்டிகலை நிபுணர்கள் தமிழகத்திலிருந்து வரவழைக்கப்பட்டனர். அவர்களில் சிறந்து விளங்கியவர் கட்டிட கலைஞர் அம்புரோஸ் ஆவார்.



ஆலயத்தின் பின்புறத்தில் விண்ணோக்கி நிற்கும் 260 அடி (79 மீட்டர்) உயரமுள்ள விவிலிய கோபுரம் இந்த ஆலயத்தை ஆசியாவின் மூன்றாவது உயரமுள்ள ஆலயம் என்கிற சிறப்பு பெற காரணமாயுள்ளது.

கோதிக் பாணி கட்டிடக்கலையில் கட்டப்பட்ட இந்த ஆலயத்தின் பரப்பளவு 25,000 சதுரஅடி ஆகும். நேர்த்தியான இந்தோ-கோதிக் பாணியில் கட்டப்பட்ட இந்த ஆலயத்தின் நுழைவாயிலில் உள்ள உயர்ந்த மணிக்கூண்டுகள் விண்ணைத் தொடுவதாக கட்டப்பட்டுள்ளது காண்போரின் கவனத்தை ஈர்க்கின்றன. ஆலயத்தின் உள்புறம் நீண்ட அகலமான மையப்பகுதி, வலப்புறமும், இடப்புறமும் குறுகலான பகுதி என மூன்று பகுதிகளாகவும் இரண்டு மாடி அடுக்குடனும் கட்டப்பட்டுள்ளன. சிலுவை வடிவில் கட்டப்பட்டுள்ள இந்த ஆலயத்தின் மக்கள் அமர்ந்து செபிக்கும் பகுதியானது தரைப்பகுதி மற்றும் மேல்விதானம் என்ற இரண்டு அடுக்குகள் கொண்டதாக அமைந்துள்ளது. மேல்விதானத்தை அடைய நான்கு புறங்களிலும் வட்டவடிவ படிக்கட்டுகளும், இவற்றையும், மேற்கூரையையும் தாங்கி பிடிக்கும் கலைவண்ணங்களுடன் அமைக்கப்பட்டுள்ள 32 பெரிய தூண்களும் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. ஆலயத்தின் மையப்பகுதியில் பலிப்பீடமும், இரண்டு பகுதியிலும், ஒவ்வொரு பகுதிக்கும் 5 சிற்றாலயப் பீடங்கள் என 10 பீடங்களுடன் மொத்தம் 11 பீடங்களுடன் மிகப்பெரிய ஆலயமாக திகழ்கிறது. கேரளாவின் மிகப்பெரிய ஆலயமான இதன் உள்புறத்தில் பல அற்புதமான சுவரோவியங்களால் அலங்கரிக்கப்பட்டு மிளிர்கின்றன. சுவரோவியங்களில் புனிதர்களின் உருவங்கள் மற்றும் விவிலியக் காட்சிகள் வண்ண ஓவியங்களாக மிளிர்கின்றன.



ஆலயத்தின் மையப்பீடமானது ஏறக்குறைய 100 அடி உயரம் உடையதாக உள்ளது. அப்பீடத்தில் மரித்த இயேசுவின் உடலை தன் மடியில் தாங்கியிருக்கும், மிகப்பெரிய 'பியதா' திருஉருவம் வடிக்கப்பட்டுள்ளது. 'பியதா' என்கிற ஒப்பற்ற கலைப்படைப்பை, பளிங்கு கற்களில் செதுக்கியவர் உலகப் புகழ்பெற்ற மைக்கேல் ஆஞ்சலோ கி.பி. 1497 – கி.பி. 1499 காலக்கட்டத்தின் வடித்தார். காண்போர் அனைவரின் கண்களிலும் கண்ணீர் திவலைகளை உருவாக்கும் இந்த ஒப்பற்ற படைப்பு, வத்திக்கான் புனித பேதுரு ஆலயத்தின் நுழைவுவாயிலின் வலப்புறம் உள்ளது. திருச்சூர் வியாகுல அன்னைத் திருத்தலத்தில் உள்ள 'பியதா' திருஉருவத்தின் இருபுறமும் வானதூதர்களான புனித

மைக்கேல் மற்றும் புனித இரபேலின் உருவங்கள் உள்ளன. வானதூதர்களுக்கு கீழே பன்னிரெண்டு திருத்தூதர்களின் உருவங்கள் வடிக்கப்பட்டுள்ளன.



கி.பி. 1986ஆம் ஆண்டு திருத்தந்தை புனித இரண்டாம் ஜான் பால் இந்தியா வந்தபோது, இந்த ஆலயத்திற்கும் வருகை தந்தார். அவ்வமயம் அவர் பயன்படுத்திய அரியணையானது நினைவு சின்னமாக வைக்கப்பட்டுள்ளது. அத்துடன், திருத்தந்தை பயன்படுத்திய வாசக மேடையும் அவர் நினைவை போற்றும் வகையில் பாதுகாப்பாக காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

1940ஆம் ஆண்டு ஆயர் பிரான்சிஸ் வாழப்பிள்ளியால் அர்ச்சிக்கப்பட்ட இந்த ஆலயமானது, 1992ஆம் ஆண்டில் திருத்தந்தை புனித இரண்டாம் ஜான் பால் அவர்களால் திருத்தலமாக உயர்த்தப்பட்டது. இறை நம்பிக்கை, அன்னை மரியாவின் பக்தி போன்றவற்றை தூண்டுகின்ற இடமாகவும், ஆழ்ந்த அமைதியில் இயேசுவின் பிரசன்னத்தை உளமார உணர்கிற ஒரு ஆன்மீக தலமாகவும் இத்திருத்தலம் திகழ்கிறது.

260 அடி உயரம் கொண்டு, திருச்சூர் நகரத்தின் பெருமையை உலகறிய பறைசாற்றும் விவிலிய கோபுரம் ஒன்று இந்த ஆலய வளாகத்தில் அமைந்துள்ளது. இந்த விவிலிய கோபுரத்தின் பணிகளானது கி.பி. 2004ஆம் ஆண்டு ஜனவரி 7ஆம் நாள் அன்று கீழை



ஆர்த்தடாக்ஸ் திருஅவையின் தலைமை நிர்வாகி கர்தினால் முதலாம் தாவூத் மூசா அவர்களால் அர்ச்சித்து தொடங்கி வைக்கப்பட்டது. பணிகள் நிறைவுபெற்று, வண்ணமயமான, நம் விசுவாச வரலாற்றை பறைசாற்றும் இந்த விவிலிய கோபுரமானது, கி.பி. 2006ஆம் ஆண்டு டிசம்பர் 3ம் தேதி, இந்தியாவிற்கான திருத்தந்தையின் பிரதிநிதி லோபஸ் குயின்டான் அவாகளால் அர்ச்சித்து திறந்து வைக்கப்பட்டது. இந்நாள், திருச்சூர் வரலாற்றிலும், அப்பகுதி இறைமக்களின் வாழ்விலும் ஒரு பொன்னாள் என்றால் மிகையாகாது.

இந்த விவிலிய கோபுரம், மனிதகுல வரலாற்றில் இறைவனின் நிறைவான, நிரந்தரமான பிரசன்னத்தை விளக்கி கூறுவதாகவும், பிற நம்பிக்கை உடைய மக்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளது.



அத்துடன், திருச்சூர் நகரை கழுகுப் பார்வையில் காண, இந்த உயரமான கோபுரத்தின் உச்சியில் பார்வையாளர் மாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. திருச்சூரின் பசுமையும் எழிலும் நிறைந்த காட்சிகளை கண்களால் பருக, கோபுரத்தின் நான்கு பக்கங்களிலும் 5.5 மீட்டர் நீளமும், 1.5 மீட்டர் அகலமும் கொண்ட மாடங்கள் கட்டப்பட்டுள்ளன. கோபுரத்தின் மேல் மாடத்தில் பழைய ஏற்பாடும், கீழ்பகுதியில் புதிய ஏற்பாட்டு பகுதிகளும் விரிவாக சித்தரிக்கப்பட்டுள்ளன. இறுதியாக, புனித தோமையார் மற்றும் கேரள தலத்திருஅவவையின் வரலாறும் சித்தரிக்கப்பட்டுள்ளன.



இயேசுவின் வாழ்க்கையின் முக்கிய நிகழ்வுகள் அழகான மரச்சிற்பங்களாக செதுக்கப்பட்டு, அதை கண்ணாடி, உலோகம் மற்றும் எண்ணெய்





# மாதா மன்றாட்டு மாலை



25

அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.

**தந்தமயமாயிருக்கிற உப்பரிகையே**

அன்னை மரியாவின் ஆன்மா ஒப்பிட முடியாத உன்னதமும், அழகும் படைத்ததாகும். அவரின் அழகு நிறை ஆன்மா வெண்மையின் நிறமும் தூய்மையின் விளக்கமாகும். யாரும் எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு ஒரு யானை தந்தத்தின் வெண்மை நிறம் போல பளிச்சிடும் வெண்மையாக சுடர்விட்டு நமது கண்களை பறிக்கிறது. அதைப் போன்று யாரும் அளவிட முடியாத அளவுக்கு அவரது ஆன்மா கறை படாத கருணை மிக்கதாகும், பாவ நிழல் அண்டாத பாசமிக்கதாகவும் மின்னுகிறது. இவ்வாறு மண்ணுலகில் வாழ்ந்த நாட்கள் முழுவதும் அவரது ஆன்மா பாவத்திற்கும் தீமைக்கும் அடிபணியாமல் இருந்ததால், அவரை "தந்தமயமாயிருக்கிற உப்பரிகையே" என்று நாமும் திருஅவையும் சேர்ந்து அழைக்கின்றோம்.

**அன்னையின் ஆன்மா -அன்பின் அர்ப்பணிப்பு**

அன்னை மரியா தனது உடல் உள்ளம் மட்டுமின்றி, தனது ஆன்மா அனைத்தையும் எல்லாம் வல்ல இறைவனிடம் அன்பில் அர்ப்பணித்த அதுமிக அருள்பெற்றவர் ஆவார். இறைவனிடம் அர்ப்பணிக்கப்பட்ட அன்னையின் ஆன்மாவை எவ்வித தீயசக்தியும் எதிர்க்கவும் முடியவில்லை, வெற்றிக் கொள்ளவும் முடியவில்லை. கடவுளின் வல்லமையும் கரத்தின் மேன்மையும் அவரைப் பாதுகாத்தது, இதனால் அவரது செயல்பாடு மனித செயல்பாட்டைக் காட்டிலும் வேறுபட்டு இருந்தது.

வல்லமையும் கர்வமும் வளரும் இப்புவியில், சுயநலம் நிறைந்த எண்ணமும் உணர்வும் அதிகரித்து வருகிறது. இதனால் ஒருவர் மற்றவரை மதிப்பதில்லை, ஒருவர் மற்றவரின் நலத்தைப் பற்றி அக்கறைக் காட்டுவதில்லை. பணமும், பொருளும் சேர்க்கும் இதயம் இருக்கும் இடத்தில் பாசமும், பகிர்ந்து வாழும் மனநிலையும் இல்லை. கல்விச்செல்வம் நிறைந்த இத்திருநாட்டில் அர்ப்பணிக்கும் அன்புள்ள ஆன்மா இன்னும் பிறக்கவில்லை. அன்னை மரியாவோ, மென்மைநிறை இதயம் கொண்டு, பொறுமை மிக்க நிலையில் வளர்ந்து, உண்மையிலும் தூய்மையிலும் உயர்ந்து, தனது முழு வாழ்வையும், ஆன்மாவையும் இறைவனிடம் முழுமனதுடன் அர்ப்பணிக்கும் போது, நமது ஆன்மா ஒளி படைத்ததாக மாறிப் பிறர் வாழ்வுக்கு வெளிச்சம் கொடுக்கும். இவ்வாறு பிறர் வாழ்வில் ஒளி ஏற்றும் ஒவ்வொருவருக்கும் அவ்வொளி பத்து மடங்காய் நிச்சயம் திரும்பக் கிடைக்கும்.

**அன்னையின் ஆன்மா -கடவுளின் திருவுளம் நிறைவேற்றிய ஒளி விளக்கு**

அன்னை மரியா இறைவார்த்தைக்கு மதிப்புக் கொடுத்து, அதை ஏற்று அதற்கு கீழ்ப்படிந்து அதன் மீது நம்பிக்கையும் வைத்தார். இதனாலேயே



# அருட்தந்தை ஜோவாக்கிம் எம். ரோசெத்தோ (1880-1935)



அருட் பணி. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச

ஜோவாக்கிம் 1880 ஜுன் 8 ஆம் தேதி இத்தாலியின் விசென்சா மாகாணத்தில் பிறந்தார். சிறுவயது முதலே ஆன்மீகப் பாதைக்கு ஈர்க்கப்பட்ட அவர், கல்வி முடித்தவுடன் துறவியாழ்க்கையைத் தேர்ந்தெடுத்தார். 1897 ஆம் ஆண்டு மரியின் ஊழியர் சபையில் சேர்ந்தார். 1903 ஜுலை 26 அன்று குருத்துவப் பட்டம் பெற்றார்.

துறவியாழ்க்கையின் தொடக்கத்திலிருந்தே அவர் மிகுந்த உழைப்பும் அர்ப்பணிப்பும் கொண்டவராகத் திகழ்ந்தார். பல மடங்களில் தலைவராகவும், ஆசிரியராகவும், குறிப்பாக ஏழைகள் மற்றும் துன்புறும் மக்களுக்காக தனது வாழ்நாளை அர்ப்பணித்தார். உலகப்போர் காலத்தில் (1915–1918) பல இடங்களில் ஒரு குருவாக செய்யவேண்டிய அனைத்து சேவைகளையும், நம்பிக்கையையும் மக்களுக்கு வழங்கினார். போரால் துன்புறுவோருக்கு ஆறுதல் கூறிய அவரது மனிதநேயம் அனைவராலும் பாராட்டப்பட்டது.

1919 ஆம் ஆண்டில், "கடவுளின் புதல்விகள் குடும்பம்" என்ற ஆன்மீக இயக்கத்தை உருவாக்கினார். இதன்மூலம் இவர் எவ்வாறு முற்போக்கு சிந்தனையாளராக இருந்தார் என்பதை உணர்த்துகிறது. இந்த இயக்கத்தை சமூக முற்போக்கு வழியில் வளர்க்கும் எண்ணத்தில், இதில் சேர்ந்த பெண் துறவிகளுக்கு எந்த ஒரு பொது சீருடையோ அல்லது தலையை மூடும் உடையோ அவர் கொடுக்கவில்லை. மாறாக, ஒரு சாதாரண பெண்களைப்போல வாழவும் ஆனால், கிறிஸ்துவுக்கு தங்கள் பணி வாழ்வு மூலம் பிரமாணிக்கமாய் இருக்கவும் கற்றுத்தந்தார். மேலும், இவர் வாழ்ந்து வந்த காலத்தில் சமூகத்தில் பல எழுத்து ஊடகங்கள் இருந்தன. அதேபோல, கிறிஸ்தவர்களுக்கும் அதிலும் குறிப்பாக மரியின் ஊழியர் சபைக்கு பல எழுத்து ஊடகங்களை தொடங்கினார். இதனால், பல்வேறு எதிர்ப்புகளை தன் சொந்த மறைமாநிலத்திலிருந்தும், வத்திக்கான் நகரிலிருந்து சந்தித்தார். இளைஞர்களை கடவுளின் வழியிலும் மறைபரப்புப் பணியிலும் ஈடுபடுத்துவதுதான் இவரது நோக்கம். சமூகத்தில் கிறிஸ்தவ அன்பையும், தியாக மனப்பான்மையையும் வளர்ப்பதே இவரது கனவு. இந்தச் எதிர்ப்புகள் மற்றும் இவரை தவறாகப் புரிந்து கொண்ட குற்றச்சாட்டுகள் இவரை மிகவும் துன்புறுத்தின. இதனால், கடுமையான நோய்கள் மற்றும் மனஅழுத்தங்களைத் அவர் எதிர்கொண்டார். இருந்தாலும் இவற்றையெல்லாம் தாங்கிக்கொண்டும், அவர் தனது பணி மற்றும் நம்பிக்கையை விட்டுவிடவில்லை. நிமோனியா, பக்கவாதம் போன்ற நோய்களால் உடல் சோர்ந்து போன போதிலும், ஆன்மீக சேவையில் இறுதி வரை உறுதியுடன் இருந்தார்.

இறுதியில், 1935 ஜுன் 11 அன்று மரியின் ஊழியர் மடத்தில் அவர் காலமானார். துன்பங்களும் தவறான குற்றச்சாட்டுகளும் சூழ்ந்திருந்தாலும், அவர் தனது வாழ்நாளை முழுமையாக கடவுளுக்கும் மக்களுக்கும் அர்ப்பணித்தார்.

ஜோவாக்கிம் எம். ரோசெட்டோவின் வாழ்க்கை நமக்குக் கற்றுக் கொடுப்பது: நம்பிக்கை, தியாகம், அன்பு, மற்றும் உண்மைக்காக போராடும் துணிச்சல். துன்பங்களைத் தாங்கியவரின் வீரமும், மனிதாபிமானமும், கிறிஸ்தவச் சாட்சியமும் என்றும் மறக்க முடியாதவை. இவரை புனிதராக்கும் பணி தொடக்கி நன்முறையில் சென்று, ஒப்புதல் கிடைத்தாலும், மற்றொரு குழுவின் எதிர்ப்பு அதிகரிக்கவே, இவரை புனிதராக்கும் பணி 2003 ஆம் ஆண்டு நிரந்தரமாக கைவிடப்பட்டது.






வண்ணப்பூச்சுகளால் மெருகூட்டப்பட்டுள்ளன. அத்துடன், திருத்தூதர் பணிகள் நூலில் உள்ள காட்சிகள் தெர்ராகோட்டாவிலும், திருத்தூதர் தோமாவின் மறைப்பணி சுவரோவியங்களாக வரையப்பட்டுள்ளன. இயேசுவின் வாழ்க்கையின் நம் கண்முன் கொண்டுவரும் ஓவியங்களை தேசிய விருதுகளைப் பெற்ற மதம், மொழி கடந்த பல்வேறு கலைஞர்களால் வரையப்பட்டுள்ளது ஒரு சிறப்பம்சமாகும்.



இருபதாவது மாடியில் இத்தாலியம், இஸ்பானியம், குரோஷியன், கிரேக்கம் உள்பட்ட பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கபட்ட விவிலியத்தின் மிகப் பழமையான தொகுப்பைக் காட்சிப்படுத்தியிருப்பது போற்றுதற்குறியது. கலை வடிவங்கள் வழியாக திருவிவிலியத்தையும், மீட்பரான இயேசுவையும் உலகிற்கும், அதிலும் குறிப்பாக பிற சமயத்தினர் நிறைந்துள்ள இந்திய மக்கள் அறிந்து கொள்ள இந்த விவிலிய கோபுரம் ஒரு மிகப்பெரிய உதவியாக உள்ளது.



ஆலயத்தின் உள்புறமானது சுவர் ஓவியங்கள் மற்றும் பல சுரூபங்களாலும் அலங்கரிங்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் உள்நுழையும் போது தமத்திருத்துவத்தின் அழகிய ஓவியமாக நிறுவப்பட்டு, ஆலயத்திற்குள் நுழைபவரை அரவணைப்போடு அழைக்கும் உணர்வை ஏற்படுத்துகிறது. ஆலயத்திற்குள் 12 அடி உயரமும், 6 அடி அகலமும் கொண்ட சிலுவைப்பாதையின் 14 நிலைகள் ஆலயத்தில் நிறுவப்பட்டுள்ளன. மேலும், இயேசு ஐந்து அப்பம் மற்றும் இரண்டு மீன்களை பலுகச்செய்த நிகழ்வும் வடிக்கபட்டுள்ளது. நற்செய்தியாளர்கள் மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவானின் ஓவியங்களும் இங்கு இடம் பெற்றுள்ளன.

அன்னையின் ஏழு வியாகுலங்களான: அன்னை மரியாவுக்கு சிமியோனின் இறைவாக்கு, அன்னை மரியாள் சூசை மற்றும் பாலன் இயேசுவோடு எகிப்துக்கு பயணித்தல், கோவிலில் காணமற்போன இயேசு தேடும் மரியா, கல்வாரி செல்லும் வழியில் இயேசுவை சந்திக்கும் மரியா, இயேசுவின் சிலுவை அடியில் நிற்கும் அன்னை மரியா, மரித்த இயேசுவை மடியில் சுமந்த தாய், இயேசுவை கல்லறையில் அடக்கம் செய்து உயிர்ப்பிற்காய் காத்திருக்கும் மரியா என அன்னையின் வியாகுலங்கள் தத்ரூபமாக வடிக்கப்பட்டு ஆலயத்தில் நிறுவப்பட்டுள்ளன. எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக வடிவமைக்கப்பட்டுள்ள 60 அடி உயரமுள்ள விண்ணேற்பு அன்னையின் திருஉருவம், நம்பிக்கையோடு பயணிக்கும் திருஅவையும் ஒரு நாள் இந்த விண்ணக பேரின்பத்தில் பங்கேற்போம் என்கிற நம்பிக்கையை வளர்ப்பதாக அமைந்துள்ளது.

இக்கட்டுரையை எழுத உந்துசக்தியாக இருந்த வத்திக்கான் வானொலியின் தமிழ் சேவையில் ஒலிப்பரப்பாகிய 'புனித வியாகுல அன்னை ஆலயம் - திருச்சூர்' என்கிற நிகழ்ச்சிக்கும், விவிலிய கோபுரத்தை பற்றிய புகைப்படங்களை எடுத்தனுப்பிய அருட்பணி. ஜோபின் அவர்களுக்கும், அதற்கு தேவையான முன்முயற்சிகளை எடுத்த அருட்சகோ. கவிதா அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

தவக்காலத்தை தொடங்கும், பல்வேறு ஒருத்தல் முயற்சிகளோடு தியாத்திரைகளையும் மேற்கொள்வதை சமீப காலமாக வழகத்தில் கொண்டுள்ளோம். வாய்ப்புடையோர் அற்புதமான கிறிஸ்தவ கோயில்கள் நிறைந்த கேரள மாநிலத்திற்கு செல்வதோடு, திருச்சூர் சென்று புனித வியாகுல அன்னையின் அருளாசீரையும் பெறுவது சாலச்சிறந்ததாகும்.

**திருப்பயணம் தொடரும்..........**

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி
## நீதிமொழிகள் 1-10



சகோ. எட்மன். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | | | | | | | | 3 |
| | 8 | | | | | | | 7 | |
| | | 12 | | | | | 11 | | |
| | | | 15 | | | | | | |
| | | | | X | X | | | | |
| | | | | X | X | | | | |
| | | | 13 | | | 14 | | | |
| | | 9 | | | | | 10 | | |
| | 5 | | | | | | | 6 | |
| 1 | | | | | | | | | 2 |

**வலமிருந்து இடம்**

2. அதன் வலக்கை நீடித்த ஆயுளை ______கின்றது; அதன் இடக்கை செல்வமும் மேன்மையும்
 கிடைக்கச் செய்கின்றது.
3. எவர் இவற்றைக் கேட்டு அறிவில் இன்னும் தேர்ச்சியடைவர்;? விவேகிகள் அறிவுரை கூறும்
 திறமை பெறுவர்;
6. நாணயமாக நடந்து கொள்வோர் இடையூறின்றி நடப்பர்; எவ்வழியைப் பின்பற்றுவோரோ வீழ்த்தப்படுவர்.?
7. கட்டளை என்பது ஒரு _____; அறிவுரை என்பது ஒளி; கண்டித்தலும் தண்டித்தலும் நல்வாழ்வுக்கு வழி.
10. ஆண்டவரின் வழி நல்லார்க்கு எதுவாகும்?; தீமை செய்வோர்க்கோ அது அழிவைத் தரும்.
11. பொல்லாரின் பாதையோ காரிருள் போன்றது; தாங்கள் எதில் _____ விழுவார்கள் என்பது
 அவர்களுக்குத் தெரியாது.

**இடமிருந்து வலம்**

1. __________களின் சொல்லைக் கேளாமற்போனேனே! போதித்தவர்களுக்குச் செவிகொடாமல்
 இருந்தேனே!
4. ஆண்டவர் தம் படைப்பின் தொடக்கத்திலேயே, தொல் பழங்காலத்தில் எதையும் படைக்கும் முன்னரே, என்னைப் _________.
5. நல்லாரின் ________ பிறருக்கு உணவாகும்;? செருக்கு நிறைந்தோரின் மதிகேடு அவர்களை





கல்வாரி மலையில் அவரை துன்பப்படுத்திய மக்களுக்கும் தனக்கும் இடையே பிளவு உருவாகி விடக்கூடாது என்பதற்காகவே தந்தையே இவர்களை மன்னியும் என்று வேண்டுகிறார், சிலுவையில் தொங்கி கொண்டிருக்கும் போது அந்த உறவு மறைந்து விடக்கூடாது மாறாக தொடர்ந்து இருக்க வேண்டும் என்று ஆசித்ததாலே தந்தையிடம் மன்றாடுகிறார். எனவே தவக்காலத்தில் பயணம் செய்யும் நாமும் உறவின் பாலமாம் இயேசுவோடு, உறவோடு வாழ ஆசித்து இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

**முதல் வாசக முன்னுரை: (வி.ப: 17:3-7)**

இஸ்ரயேல் மக்கள் பாலை நிலத்தில் பயணம் செய்தபோது குடிக்க தண்ணீரின்றி தவித்தனர். எனவே மோசேயை நோக்கி, “எங்களையும், எங்கள் பிள்ளைகளையும், கால்நடைகளையும் தாகத்தால் சாகடிக்கவா எகிப்திலிருந்து அழைத்து வந்தீர்?” என்று முனுமுனுத்தனர். எனவே மோசே ஆண்டவரிடம் இந்த மக்களின் மனநிலையை குறித்து கதறுகிறார். ஆண்டவரும் மோசேயின் வேண்டுதலைக் கேட்டு எவ்வாறு அற்புதம் செய்கிறார் என்பது பற்றி இவ்வாசகத்தில் கேட்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை: (உரோ: 5:1-2,5-8)**

அன்பார்ந்தவர்களே! இவ்வுலகத்தில் நல்லவர் ஒருவருக்காக உயிரை கொடுப்பதே அரிது. ஆனால் இயேசு கிறிஸ்து நாம் பாவிகளாய் இருந்த போதும் நம் மீது கொண்ட அளவற்ற அன்பின் காரணமாக நமக்காக தன் உயிரை கொடுத்தார். எனவே கடவுளின் ஆட்சியில் நாமும் ஒரு நாள் பங்கு பெறுவோம் என்னும் எதிர்நோக்கு இயேசு கிறிஸ்து வழியாய் நமக்கு கிடைத்துள்ளது என்று கூறும் இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுகள்**

1. வாழ்வு தரும் ஊற்றே இறைவா! எம் திருஅவையிலுள்ள ஒவ்வொருவரையும் நீர் ஆசீர்வதித்து, அவர்கள் உம் அன்பில் எந்நாளும் நிலைத்து நிற்கவும், உமது பணியைத் தொடர்ந்து ஆற்றவும் தேவையான அருளை பொழிய வேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகிறோம்.
2. பாதுகாக்கும் இறைவா! “பெண்கள் இந்நாட்டின் கண்கள்” என போற்றும் நாங்கள் அவர்களை மதிக்கவும், அவர்களுக்கு எதிராக ஏற்படும் அநீதிகள் மற்றும் கொடுமைகள் நீங்கி சுதந்திர உணர்வோடும், மகிழ்ச்சியோடும் வாழ அருள் வேண்டி இறைவா! உம்மை மன்றாடுகிறோம்.
3. உண்மையின் சுடரே எம் இறைவா! எம் மக்களாகிய நாங்கள் அனைவரும் உதவும் மனப்பான்மை கொண்டு இறைத்திட்டத்திற்குச் செவிமடுக்கும் பண்பில் சிறந்து உணர்ந்தவர்களாய் பொங்கி எழும் ஊற்றாக மாறி நாங்கள் அனைவரும் உமக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கத் தேவையான அருள் வரங்களை தர வேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகிறோம்.
4. கருணையின் வடிவே எம் இறைவா! பெண் குழந்தைகள் கருவிலேயே பாதுகாக்கப்படவும், தேவையான கல்வியறிவு பெறவும், மேலும் ஆதரவற்றோர்களாக கருணை இல்லங்களில் உள்ளவர்களுக்கு உடல், உள்ள மற்றும் ஆன்ம நலன் கிடைக்கவும் அருள் வேண்டி இறைவா! உம்மை மன்றாடுகிறோம்.

நற்செய்தியின் வழியாக நமக்கு அளித்துள்ளார் என்று கூறும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

**மன்றாட்டுகள்**

1. எமைக்காக்கும் தெய்வமே இறைவா! எம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் பொதுநிலையினையர் அனைவரும் தாங்கள் தேர்ந்து கொண்ட வாழ்வின் பாதையில் உம் திருவுளப்படி நடந்திட அருள் வேண்டி இறைவா! உம்மை மன்றாடுகிறோம்.

2. உண்மையின் சுடரே எம் இறைவா! உம் மக்களாகிய நாங்கள் அனைவரும் உதவும் மனப்பான்மையைக் கொண்டு இறைதிட்டத்திற்குச் செவிமடுக்கும் பண்பில் சிறந்து விளங்கவும், நல்ல உடல் உள்ள நலத்துடன் இறைப்பணியாற்றிடவும் வேண்டிய அருளை தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. “என் அன்பார்ந்த மைந்தர் இவரே” என்று கூறிய இறைவா! இயேசுவின் உருமாற்ற நிகழ்வைத் தியானிக்கும் நாங்கள், எங்கள் வாழ்வில் மனமாற்றம் பெற்று, உம் பணிச்செய்யவும், உம் வழி நடக்கவும், உம்மில் வாழவும் வரமருள வேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகிறோம்.

4. அழைத்தலின் நாயகனே இறைவா! நாங்கள் அனைவரும் இயேசுவைப்போல் உண்மை, அன்பு, நீதி, இரக்கம் கொண்டவர்களாக மற்றும் உள்ளத்தில் தூய்மை உள்ளவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகிறோம்.

**தவக்காலம் மூன்றாம் ஞாயிறு**
**(08. 03. 2026)**

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே! இன்று தவக்காலத்தின் மூன்றாம் ஞாயிறை சிறப்பிக்கும் நமக்கு திருஅவையானது உறவை ஆழப்படுத்தி வாழ அழைக்கின்றது. நம் இறைமகன் இயேசு, சமாரிய பெண்ணிடம், “குடிக்க, தண்ணீர் கொடு” என்று கேட்டதும், கல்வாரி மலையில் சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்தபோது “தாகமாய் இருக்கிறது” என்று கூறியதும், உறவின் ஆழம் என்னவென்று நமக்கு புரிய வைப்பதற்கே. யூதர்களுக்கும், சமாரியர்களுக்கும் இடையே உள்ள விரிசல்களை சரி செய்து அவர்கள் உறவை வளர்த்தெடுக்கவும், சமாரியப் பெண்ணின் வாழ்க்கை சிக்கல்களை சரி செய்யவுமே அவளிடம் தண்ணீர் கேட்கின்றார். இயேசு சாதி, மதங்களைக் கடந்தவர், இனங்களைக் கடந்தவர் என்பதை அறியாத சமாரிய பெண்ணின் மனதில் ஏராளமான என்ன அலைகள் அடிக்க தவறவில்லை. யூதன் சமாரியர்களிடம் உணவு வாங்கி உண்பதும், பன்றியின் இறைச்சியை உண்பதும் ஒன்று என்பது யூதர்களின் எழுதப்படாத சட்டமாயிற்றே என்ற அடுக்கடுக்காய் கேள்விகள் அவளது மனதில் எழாமல் இல்லை. ஆனாலும் இயேசு ஒரு சாதாரண மனிதர் இல்லை என்பதை புரிந்து கொண்டார். சமுதாய சிக்கல்களையும் சமயத்தால் ஏற்படும் விரிசல்களையும் சரிப்படுத்தி உறவுக்கு உறு கொடுக்கவே இறைவன் இயேசு தன்னோடு உறவாடுகிறார் என்பதை உணர்கிறாள். இயேசுவின் உரையாடல் வழியாக அவரை ‘இறைமகன், போதகர்’ என்பதை ஏற்றுக் கொள்கிறாள். இதன் வழியாக அங்கே ஒரு உறவு மலர்கிறது. அதே போன்று தான்





அழித்துவிடும்.
8. ஏனெனில், என் வாய் ______ பேசும்; பொல்லாங்கான பேச்சு என் நாவுக்கு அருவருப்பு.
12. நான் அவர் அருகில் அவருடைய ___யாய் இருந்தேன்; நாள்தோறும் அவருக்கு மகிழ்ச்சியூட்டினேன்; எப்போதும் அவர் முன்னிலையில் மகிழ்ந்து செயலாற்றினேன்.
13. நேர்மையாளரின் பாதை ______ ஒளி போன்றது; அது மேன்மேலும் பெருகி நண்பகலாகின்றது.
15. எனவே, நீ __________ நெறியில் நடப்பாயாக! நேர்மையாளரின் வழியைப் பின்பற்றுவாயாக;
2:20

**மேலிருந்து கீழ்**

3. இகழ்வாரைக் கடிந்து கொள்ளாதே; அவர்கள் உன்னைப் பகைப்பார்கள்; _______ நீ கடிந்து கொண்டால், அவர்கள் உன்னிடம் அன்பு கொள்வர்.
4. நல்லாரின் சொற்கள் தூய வெள்ளிக்குச் சமம்; பொல்லாரின் எண்ணங்களோ எதற்குச் சமம்.?
7. என்னை அடைந்தவர்கள் பெறும் பயன் பசும்பொன்னைவிடச் சிறந்தது; என்னை அடைந்தவர்களுக்குக் கிடைக்கும் ________ தூய வெள்ளியை விட மேலானது.
8. ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம்; தூயவராகிய அவரைப் பற்றிய _______ மெய்யுணர்வு.
11. “திருடின தண்ணீரே இனிமை மிகுந்தது; வஞ்சித்துப் பெற்ற உணவே _____ தருவது” என்பாள்.
15. உன்னால் ______ செய்யக் கூடுமாயின், தேவைப்படுபவர்க்கு அந்த ______யைச் செய்ய மறுக்காதே.

**கீழிருந்து மேல்**

1. என் கட்டளைகளைக் கடைப்பிடி, நீ வாழ்வடைவாய்; என் அறவுரையை உன் போல காத்துக்கொள்வாய்.
2. சுழல் காற்றுக்குப்பின் பொல்லார் இராமற்போவர்; கடவுளுக்கு அஞ்சி நடப்பவர்களோ என்றுமுள்ள எது போல நிற்பார்கள்.?
5. ஞானத்தையும் மெய்யுணர்வையும் தேடிப்பெறு; நான் _________ மறந்துவிடாதே; அதற்கு மாறாக நடவாதே.
6. எனினும், அது _______ உணவைச் சேர்த்து வைக்கும்; அறுவடைக் காலத்தில் தானியத்தைச் சேகரிக்கும்.
9. _______ பெற்று ஞானத்தை அடையுங்கள்; அதைப் புறக்கணியாதீர்கள்.
10. “பேதையரே, நீங்கள் இன்னும் எவ்வளவு காலம் உங்கள் பேதைமையில் உழல்வீர்கள்? இகழ்வார் இன்னும் எவ்வளவு காலம் இகழ்ச்சி செய்வதில் மகிழ்ச்சி காண்பர்? முட்டாள்கள் இன்னும் எவ்வளவு காலம் எதை வெறுப்புடன் நோக்குவார்கள்?
14. செருக்குற்றோரை அவர் இகழ்ச்சியுடன் நோக்குவார்; தாழ்நிலையில் உள்ளவர்களுக்கோ _______ காட்டுவார்;

**விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-02-2026**

# மீட்புப் பயணம்

கலைச்சுடர் முனைவர். ஜோ.விண்ணரசன், மேல்வழி



**ஆபிரகாம்**

ஊர் என்ற ஊரினிலே -ஆபிரகாம்
பேர் கொண்ட பெரியவராம்
சீர் பூண்ட உருஅவராம் -நீதி
நேர் கொண்ட தணிஅவராம்

நாட்டில் பெரும் பஞ்சமாம் -ஆதலின்
காட்டில் விளைச்சல் கொஞ்சமாம்
வீட்டில் இருப்பதைக் கொண்டு -தன்
பாட்டில் வசித்து வந்தாராம்

கடவுள் ஆபிரகாமிடம் பேசி -அன்பு
கட்டளை ஒன்றையும் வீசி -தன்
நாட்டையும் வீட்டையும் துறந்து -தான்
காட்டிடும் நாட்டிற்குப்போ என்றாராம்

கட்டளையின்படி ஆபிரகாம் நடந்தாராம்
காணான் தேசமே விரைந்தாராம்
காணும் யாவுமே அடைந்தாராம் -நல்லாள்
சாராவின் கணவராய் திகழ்ந்தாராம்

இரு மனங்களும் இணங்கிடினும்
பல ஆண்டுகள் துலங்கிடினும்
மகப் பேறுபெறும் அருளில்லை
மனப் பேறில்சற்று சுகமில்லை

தூதர்கள் வழியே ஆண்டவர்பேசி
முதியவர் ஆயினும் ஆற்றலைக்காட்டி
முத்தான குழந்தைப் பேற்றினை -கடவுள்
சொத்தாக அருளச் செய்தாராம்

ஈசாக்கு என்னும் பெயர்வைத்து
ஈசன் திருவருள் புகழ்சாயத்து
வேடம் எதுவும் கொள்ளாமல் -கடவுள்மேல்
வேட்கை கொண்டாராம் திடமாக

அசைக்க முடியாத பற்றுறுதி –திருவுளம்
அப்படியே முடிக்கும் செயலுறுதி -கடவுளின்
நம்பிக்கைக்கு இவர்தான் தளபதியாம்
நம்பிக்கை யாளர்களுக்கு இவரே தகும்பதியாம்.





நம்பிக்கையை திடப்படுத்தவே அவர்களை தாபோர் மலைக்கு அழைத்துச் செல்கின்றார். சீடர்கள் அனைவரையும் அழைத்து சென்றாரா? இல்லை தனக்கு நெருக்கமான வட்டத்தில் இருந்த பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோரை மட்டுமே அழைத்துக் கொண்டு உயர்ந்த மலையில் ஏறுகின்றார். இயேசு எல்லா சீடர்களையும் ஏற்றுக்கொண்டவர் தான், அன்பு செய்தவர் தான். ஆனால் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு வட்டத்தில் வைத்து அன்பு செய்தார். அந்த வகையில் இந்த மூன்று சீடர்களும் நெருக்கமாக இருப்பதால் இவர்கள் மத்தியில் இயேசு உருமாறி பேரொளியாக காட்சி தருகிறார். நானே உலகின் ஒளி என்று சொன்ன இயேசு ஒளியாக ஒளி பிழம்பாக தன் சீடர் முன் தோன்றுகிறார். அந்த ஒளி மாற்றத்தில் மோசே மற்றும் எலியாவை சீடர்கள் கண்டுகொள்கின்றனர். அதை கண்டு வியந்த பேதுரு நாம் இந்த மலையிலேயே கூடாரம் அமைத்து தங்கியிருப்போம் என இயேசுவிடம் கூறுகிறார். தித்திக்கும் அந்த அனுபவத்தில் நிலைத்து நிற்க விரும்பிய பேதுரு, தனக்கென்று கூடாரத்தை கேட்காமல் மற்ற அனைவருக்காகவும் கேட்பதில் இருந்து பேதுருவின் உயர்ந்த பண்பை நாம் காண முடிகிறது. ஆனால் அவர் துன்பத்தை ஏற்பதற்கு தயார் நிலையில் இல்லை என்பதை நமக்கு எடுத்துக்காட்டுகிறது. இயேசுவோ துன்பப்படுவதே என் இலட்சியம் அதற்காகவே இவ்வுலகிற்கு வந்தேன் என்பதை பேதுருவுக்கு புரிய வைக்கின்றார். வாருங்கள் கீழே போவோம் துன்பப்படுவோம் என்று அழைக்கின்றார். நாமும் பெரும்பாலான நேரங்களில் பேதுருவைப் போல தான் இருக்கின்றோம் துன்பத்தை விரும்புவது இல்லை நிம்மதி பறிபோகும் என்று ஒதுங்கி விடுகின்றோம். துன்பம் தான் இன்பத்தின் ஏணி என்பதை நினைக்க தவறிவிடுகின்றோம். நாம் வலிகளையும் துன்பங்களையும் தாங்கிக் கொண்டு வாழும் போது தான் உயர்வடைகின்றோம். தோல்விகள் நிரந்தரமல்ல அவை வெற்றிக்கான படிக்கட்டுகள். இயேசுவின் உருமாற்ற பெருவிழாவில் இயேசுவைப் போல் துன்பங்களை துணிவோடு ஏற்றுக் கொள்ள தீர்மானம் எடுத்து அதன்படி வாழ முயற்சி செய்து இறையருளை நிறைவாய் பெற இத்திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.

**முதல் வாசக முன்னுரை: (தொ.நூ: 12:1-4)**

விசுவாசத்தின் தந்தை என்று அழைக்கப்படும் ஆபிரகாம், ஆபிரமாயிருந்தபோது ஆண்டவர் அவரை நோக்கி, “நீ உன் நாட்டிலிருந்தும், உன் இனத்தவரிடமிருந்தும் பிரிந்து நான் உனக்கு காண்பிக்கும் நாட்டிற்கு செல், நான் உன்னை பெரிய இனமாக்குவேன்” என்று ஆசி வழங்குகிறார். இந்த ஆசீர் அவருக்கு மட்டுமல்ல, அவர் வழியாக மண்ணுலகம் முழுவதும் ஆசி பெறும் என்று கூறும் இவ்வாசகத்தைக் கேட்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை: (2திமோ: 1:8-10)**

திருத்தூதர் பவுல் திமோதேயுவிடம் மடல் வழியாக பேசுகிறார். நாம் ஆண்டவருக்கு சான்று பகர்வதை குறித்தோ கைதியாக இருப்பதை குறித்தோ வெட்கமடைய தேவையில்லை. கடவுளின் வல்லமைக்கேற்ப நற்செய்தியின் பொருட்டு துன்பப்படுவது நல்லது என்றுக் கூறுகிறார். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உலகில் தோன்றி சாவை அழித்து, அழியா வாழ்வை

கடவுளின் கட்டளைகளை மீறி பாவம் செய்ததால், அவர்கள் கண்கள் திறக்கப்பட்டன என்று கூறும் இவ்வாசகத்தை கேட்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை: (உரோ: 5:12-19)**

ஆதாம் என்னும் ஒரு மனிதன் வழியாய் பாவம் இந்த உலகில் நுழைந்தது. அந்தப் பாவத்தின் வழியாய் சாவு வந்தது. ஆனால் இயேசு கிறிஸ்து என்னும் மீட்பர் வழியாய் பாவம் நீங்கி வாழ்வு கிடைத்தது. ஒருவரின் குற்றத்தாலே சாவு ஆட்சி செலுத்தினதென்றால், அருள் பெருக்கையும், கடவுளுக்கு ஏற்புடையவராகும் கொடையையும் கிறிஸ்து வழியாக அணிந்து கொண்டவர்கள் வாழ்வு பெற்று ஆட்சி செலுத்துவார்கள் என்பது உறுதி என்று கூறும் இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுகள்**

1. வார்த்தையான எம் இறைவா! உமது தெய்வீக வாழ்வு தரும் வார்த்தையை நாளும் வாழ்ந்து பிறரும் வாழ துணை செய்து கொண்டிருக்கும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவரத்தார் அனைவரையும் ஆசீர்வதித்து, இவ்வுலக சவால்களை வெல்ல அருள் தர வேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகிறோம்.
2. வழிநடத்தும் இறைவா! இன்றைய இளைய தலைமுறையினர் இவ்வுலக மாயைக்கும் ஊடகத்திற்கும் அடிமையாகாமல், இறையச்சமே ஞானத்தின் தொடக்கம் என்பதையுணர்ந்து, இறைவார்த்தையை கேட்டு இறைவனுக்கும், பெற்றோருக்கும், தங்களின் மனசாட்சிக்கும், கீழ்ப்படிந்து வாழ அருள்தர வேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பின் இறைவா! நாங்கள் தவக்காலத்தின் தவமுயற்சியின் பலனாக இவ்வுலகத்தில் உம்மை மட்டுமே அதிகம் நேசிக்கவும், உமது அன்பை விட்டு பிரிந்து விடாமல் உம்மில் நிலைத்திருக்கவும், அதன் மூலம் பிறர் வாழ்வில் கிறிஸ்துவை வெளிப்படுத்தக் கூடியவர்களாக வாழ்ந்திட அருள் தர வேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகிறோம்.
4. அமைதியின் ஊற்றே எம் இறைவா! நாடுகளுக்கிடையே ஏற்படுகின்ற போர், வன்முறை, விபத்து போன்ற சூழலிலிருந்து இவ்வுலகை பாதுகாத்து, உமது நிலையான அமைதியை தந்தருளும். எங்கும் உம் அன்பின் ஆட்சியால் மக்கள் நிம்மதியோடு வாழத் தேவையான அருள்தர வேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகிறோம்.

**தவக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு**

**(01.03.2026)**

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே! இன்று நாம் இயேசுவின் உருமாற்ற நிகழ்வை கொண்டாடுகிறோம். தனது பாடுகளும், சிலுவை சாவும் நெருங்கி வருவதை உணர்ந்த இயேசு, இதற்கு சாட்சிகளாய் இருக்கப் போகும் தனது அன்பு சீடர்களுக்கு தனது தெய்வீக தன்மையை உருமாற்றம் அடைந்து வெளிப்படுத்துகின்றார். தன்னோடு பயணித்த சீடர்கள் தனது புதுமைகள் செய்யும்போதும் மற்றும் மகிழ்ச்சியான நேரங்களிலும் நம்பிக்கையில் உறுதியாக இருப்பதையும், துன்பங்கள் துயரங்கள் வரும்போது நம்பிக்கை குன்றி இருப்பதையும் உணர்ந்த இயேசு அவர்களின்





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்

அருள்பணி. ஜான் பால் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்



**பொதுக்காலம் 6-ஆம் ஞாயிறு**

**(15.02.2026)**

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே! வாழ்வு தரும் சட்ட திட்டங்களை நமதாக்கி பிறரோடு நல்லுறவு கொண்டு வாழ்வோம். கொலை, விபச்சாரம், பொய்யானை, சினம் போன்ற திருச்சட்டத்திற்கு எதிரான தீமைகளிலிருந்து விலகி பிறரோடு நல்லுறவு கொண்டு வாழ பொதுக்காலம் ஆறாவது ஞாயிறு நம்மை அழைக்கிறது. மாற்றம் ஒன்றே மாறாதது, இவ்வுலகில் மாறாதது ஏதும் இல்லை மாறாதவர் கடவுள் ஒருவரே. எந்த ஒரு மாற்றமும் முன்னேற்றத்தை நோக்கி நம்மை அழைத்துச் செல்ல வேண்டும் இல்லையெனில் அம்மாற்றம் பயனற்றதே. தேவைப்பட்டால் சட்டங்களை கூட மாற்றத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும், ஏனென்றால் சட்டங்கள் மனிதனுக்காகவே, மனிதன் சட்டத்திற்காக அல்ல. மனிதனுக்கு உரிமைகளைப் பெற்று தருவதே சட்டமாக இருக்க வேண்டும். அது உரிமைகளை பெற்றுத்தரவில்லையெனில் அது அவனை அடிமைப்படுத்துகிறது என்பது தானே பொருள். சட்டங்கள் மனித வாழ்வை வளப்படுத்துவதற்கே ஆகும். இயேசுவின் காலத்தில் இருந்த யூத சட்டங்கள் பெரும்பாலும் மனிதனை அடிமைப்படுத்துவதற்கே பயன்பட்டன. இந்த அவல நிலையை மாற்றவே இயேசு சட்டத்தை அழிக்க அல்ல நிறைவேற்றவே வந்தேன் என்றார். அவரது அணுகுமுறை திருச்சட்டத்தை அழிப்பதோ மாற்றுவதோ அல்ல. ஆம், எல்லாத் திருச்சட்டங்களின் நிறைவும் இயேசுவே. அடிமை தனத்திலிருந்து நம்மை மீட்ட இயேசு நம்மை நல்லுறவோடு வாழவும் பணிக்கின்றார். ஆலய பீடங்களையும் நற்கருணை பேழையையும் அலங்கரிக்கின்றோம், தூபம் இடுகின்றோம், தாழ்ந்து பணிந்து வணங்குகின்றோம் அதே இறைவனின் பிரசன்னத்தை சக மனிதர்களிடம் காண்பது மிகக் கடினமான ஒரு சவாலாக இருக்கின்றது. எனவே தான் இயேசு சகோதர சகோதரிகளிடம் சினம் கொண்டு ஆழமான பகைமையும், வைராக்கியமும் பாராட்டுவதை சாடுகிறார். புண்பட்டு சின்னா பின்னமாகி கிடக்கும் உறவுநிலையோடு பலி செலுத்துவது, இறைவன் மட்டும் போதும், இறைவன் தந்த மற்ற உறவுகள் எனக்கு தேவை இல்லை என்று கூறுவதாகவே தோன்றுகிறது. அத்தகைய உறவு நிலைகள் சரி செய்யப்பட வேண்டும். எனவே காணிக்கையை விட கண்ணியமான நல்லுறவு முக்கியமானது என்பதை ஆண்டவர் தெளிவுப்படுத்துகிறார். அடிமை

தனத்திலிருந்து இறைவனால் எழுப்பப்பட்ட நாம் சக மனிதர்களோடு நல்லுறவு கொண்டு வாழ இத்திருப்பலியில் ஒருமனதாய் ஜெபிப்போம்.

**முதல் வாசக முன்னுரை: (சீராக் 15:15-20)**

அன்பார்ந்த மக்களே! ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர் மீது அவருடைய பார்வை எப்போதும் இருக்கும். அவருடைய செயல்கள் அனைத்தையும் அவர் உற்று நோக்கிக் கொண்டிருக்கிறார். நன்மை, தீமை, வாழ்வு, சாவு இவை மனிதர் முன் வைக்கப்பட்டுள்ளன. இதில் நாம் எதை தேர்ந்தெடுக்கிறோமோ அதுவே நமக்கு கொடுக்கப்படும். எனவே ஞானமே உருவான இறைவனின் துணையோடு ஞானத்தோடு நடந்து கொள்ள அழைக்கும் இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை: (கொரி: 2:6-10)**

அன்பிற்குரியவர்களே! கடவுளின் ஞானம் மிகப்பெரியது, அழிவுக்குரிய உலக ஞானத்தோடு இதை ஒப்பிட முடியாது. நாம் மேன்மை பெற வேண்டும் என்பதற்காக உலகம் தோன்றும் முன்பே கடவுளின் திட்டத்தில் இருந்தது. மனிதர்கள் தான் அதை அறிந்துக் கொள்ளவில்லை. எனவே கடவுள் தூய ஆவியாரின் வழியாக இதை நமக்கு வெளிப்படுத்துகிறார். ஏனெனில் தூய ஆவியாரே அனைத்தையும் துருவி ஆய்கிறார். கடவுளின் ஆழ்ந்த எண்ணங்களையும் அறிகிறார், என்றுக் கூறும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

**மன்றாட்டுகள்**

1. விண்ணக அரசராம் இறைவா! எம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவரத்தார் அனைவரையும் பாதுகாத்தருளும். இறைஅன்பையும் பாவத்தை பற்றிய விழிப்புணர்வையும் இறை மக்களுக்கு அளித்து, தூய வாழ்வில் அவர்களை வழிநடத்த அருள்தர வேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகிறோம்.
2. நன்மையின் ஊற்றே எம் இறைவா! எம் பாரத திருநாட்டை வழிநடத்தும் அனைத்து தலைவர்களும் பொது நலத்துடன் தங்களது அதிகாரத்தை பயன்படுத்தி, மக்களை பாதுகாத்திடவும் வறுமை மற்றும் வேலை வாய்ப்பின்மையை நீக்கி, நாட்டை முன்னேற்ற பாதையில் வழி நடத்திட வேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகிறோம்.
3. கருணையின் தெய்வமே இறைவா! இப்பலியில் பங்கேற்கும் நாங்கள் ஒவ்வொருவரும் இறைவார்த்தைக்கு செவிகொடுத்து, எங்களது வாழ்வில் கோபத்தைக் குறைத்து, உள்மன அமைதியுடனும் மகிழ்வுடனும் உறவுகளோடு வாழ வரமருள்ள வேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகிறோம்.
4. மன்னிப்பின் ஊற்றே எம் இறைவா! பிறரன்புயின்றி இறையன்பு இல்லையென்பதை கிறிஸ்தவர்களாகிய நாங்கள் உணர்ந்து, ஒருவர் மற்றவரை மன்னித்து உமக்கு உகந்த வாழ்வை வாழ வரமருள்ள வேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகிறோம்.

**தவக்காலம் முதல் ஞாயிறு**
**(22. 02. 2026)**





கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே! தவக்காலத்தின் முதல் ஞாயிறான இன்று, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து 40 நாட்கள் பாலை நிலத்தில் நோன்பு இருந்து அலகையால் சோதிக்கப்பட்டு அந்த சோதனைகளை சாதனை ஆக்கியதை இன்று நாம் தியானிக்கின்றோம். ஆம் “40” என்ற எண்ணை விவிலியத்தில் பல்வேறு இடங்களில் பார்க்கின்றோம். நோவாவின் காலத்தில் 40 -நாள் இரவும் பகலும் மழை பெய்தது. இஸ்ரயேல் மக்கள் 40 ஆண்டுகள் பாலை நிலத்தில் பயணம் செய்து வெற்றியின் பாதையை நோக்கி நடந்தனர். விடுதலைப் பயணம் 24:18ல் மோசே சீனாய் மலையில் 40 இரவும் 40 பகலும் இறைவனோடு உறவாடிக் கொண்டிருந்தார். 40 நாள் எலியா இறைவாக்கினர் உணவு உண்ணாமல் இறைவனோடு உரையாடிக் கொண்டிருந்தார். எசேக்கியேல் இறைவாக்கினர் மக்களின் பாவ சுமையை 40 நாள் சுமந்தார் என்றும், நினிவே மக்கள் மனத்திரும்ப, யோனா இறைவாக்கினர் 40 நாள் போதித்தார் என்றும் காண்கின்றோம். இவ்வாறாக 40 என்ற எண் மிக முக்கியமானது. எனவே தான் நமது தாயாம் திருஅவை 40 நாட்களை நமக்கு கொடுத்து நம்மையே நாம் சுய ஆய்வு செய்து நமது வாழ்வை சரிப்படுத்தி இறைவனோடு ஒன்றிக்க அழைக்கிறது. தவக்காலம் என்பது சாலை நடுவில் இருக்கும் எச்சரிக்கை விளக்கை போன்று “நில்” என்று நம்மை எச்சரித்து “கவனி” என்று நம் வாழ்வை அலசி ஆராய செய்து பின் “செல்” என்கின்றது. இன்றைய இறை வார்த்தை சோதனைகளை சாதனையாக்க நம்மை அழைக்கின்றது. மனித வாழ்வில் அதிகம் இடம்பெறுவது சோதனைகளே. ஆனால் சோதனை தான் ஒரு சிலரை வரலாற்று சாதனை புரிய வைக்கின்றது நம் இறை மகன் இயேசுவைப் போல. வெட்டிய மரம் தான் உயிர் கொண்டு எழுகின்றது. சுட்ட பின் தான் தங்கம் சுடர் ஒளி வீசுகிறது. நம்மில் பலர் சோதனைகளைக் கண்டு பயப்படுகின்றோம், துவண்டு விடுகின்றோம். இன்று நாம் போற்றி புகழும் புனிதர்களும், மறைசாட்சிகளும் ஆசைகளைக் கடந்து சோதனையை சந்தித்தவர்கள். சோதனை தான் இறையரசு சாதனைக்கான வழி என்று வாழ்ந்து காட்டியவர்கள். அவர்களின் அடிச்சுவடுகளை பின்பற்றும் நாமும் சோதனைகளைக் கண்டு விலகி விடாமல் இருப்போம். சோதனைதான் சாதனைக்கு வழிகாட்டி என்பதை உணர்ந்து நமது வாழ்க்கை பயணத்தை தொடர்வோம்.

**முதல் வாசக முன்னுரை: (தொ.நூ: 2:7-9,3:1-7)**

அன்பார்ந்தவர்களே! கடவுள் நிலத்திலிருந்து மண்ணை எடுத்து, மனிதனை உருவாக்கி, தன் உயிர் மூச்சை ஊதி உயிர் பெறச் செய்தார். ஏதேனில் ஒரு தோட்டம் அமைத்து அழகான சுவை மிக்க பழங்களையும், தோட்டத்தின் நடுவே நன்மை தீமை அறியத்தக்க வாழ்வின் கனியையும் வைத்து அதை மட்டும் தொடக்கூடாது என்று சொல்லி இருந்தார். ஆனால் சூழ்ச்சி மிக்க பாம்பு பெண்ணை ஏமாற்றி அதை உண்ணும் படி செய்தது. அவள் தன் கணவனுக்கும் கொடுத்தாள். இவ்வாறு அவர்கள் கீழ்ப்படியாமல்,